Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் இளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
* பல் கட்டுவதற்கும்,
* பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
* இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1761)



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 20 (11.04.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:193

# புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் வாகரை; அணிகளை பின்வாங்க கருணா உத்தரவு!

## தொப்பிகல தளத்தை பலப்படுத்துகிறார்

(மட்டக்களப்பு)


**தமிழர் தாயகத்திலிருந்து கருணாவை வெளியேற்றி - போராளிகளையும் பொதுமக்களையும் விடுவிப்பதற்கான தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அணிகள் இறங்கியதையடுத்து - கருணா தனது அணிகளை பின்வாங்கச் செய்து தொப்பிகல காட்டிலுள்ள பிரதான தளத்தின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

**சர்வதேச செய்தி நிறுவனமொன்றின் இலங்கைக்கான நிருபராகப் பணியாற்றும் இந்தியர் ஒருவர் கஜீவத்தை எனுமிடத்திலிருந்து மேற்படி செய்தி நிறுவனத்திற்கு நேற்று வழங்கிய செய்தியிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.**

இராணுவத்தினர் மற்றும் நேரில் கண்டவர்களின் தகவல்களின் படியே இந்தத் தகவலை வழங்கிய மேற்படி பத்திரிகையாளர், சுமார் 2,000 பேரை கருணா இவ்வாறு பின்வாங்கச் செய்து தனது தளத்தைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தியுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

வாகரைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோதலையடுத்து அங்கிருந்த சுமார் 500 கருணா அணியினர் அப்பிராந்தியத்தை விட்டு ஏற்கனவே வெளியேறியுள்ளதாக மேற்படி பத்திரிகையாளர் தனது செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், வாகரைப் பிரதேசம் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளதையும், மேற்குறிப்பிட்ட 2,000 பேரில் ஏனையவர்கள் மட்டக்களப்பின் வேறு பகுதிகளிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுவதாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பின் எந்தெந்தப் பகுதிகளிலிருந்து இந்த பின்வாங்கல் இடம்பெற்றது என்ற விபரங்கள் எதுவும் வெளியாகாத போதும், தான் தற்போது பலாத்காரமாக இணைத்து வைத்திருக்கும் போராளிகள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து தமக்கெதிரான தாக்குதல்களில் ஈடுபடும் சம்பவங்கள் வாகரையில் இடம்பெற்றதையடுத்தே இவ்வாறான நடவடிக்கையில் கருணா அணியினர் ஈடுபட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)




## வாகரை மீட்பு நடவடிக்கையில் ஜெயந்தன் படையணியே பங்கேற்பு

(மட்டக்களப்பு)

ஜெயந்தன் படையணியே மட்டு-அம்பாறை மீட்புத் தாக்குதலின் முதற்கட்டமான வாகரை நோக்கிய பலமுனைத் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

கண்டலடி என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த புலிகளின் முன்னணி நிலைகள் மீது கருணாவின் தளபதிகளான 'ஜிம்கெலி தாத்தா' தலைமையில் ஒரு தாக்குதலும், 'றொபேர்ட்' தலைமையில் இன்னொரு தாக்குதலும் இடம்பெற்றபோதும், இரு தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டதாக மட்டக்களப்பிலிருந்துகிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கருணா அணியினர் மீதான இத்தாக்குதல்களை மட்டு-அம்பாறை மாவட்டங்களுக்கான விசேட தளபதியான ரமேஸ் மற்றும் ஜெயந்தன் படையணியின் விசேட தளபதியான ஜெகாத்தன் ஆகியோர் வழிநடத்திச் சென்றனர்.

ஜெயந்தன் படையணியானது மட்டு- அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்டது.

இதேவேளை ஜெயந்தன் படையணியின் சுற்றிவளைப்பிற்குள்ளான கருணாவின் அணி

## கருணா குழுவிலுள்ள போரளிகளை இணைந்து கொள்ளுமாறுகோரிக்கை

## கதிரவெளிப் பகுதியிலிருந்து 600 பேர் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்

பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் உரு வாக்கப்பட்டது.

இதேவேளை ஜெயந்தன் படையணியின் சுற்றிவளைப்பிற்குள்ளான கருணாவின் அணிகள் எட்டு 120 மி.மீ மோட்டார்கள் உள்ளிட்ட ஆயுதங்களை விடுதலைப்புலிகளிடம் கையளித்துள்ளன.

முன்னர் கருணாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த தளபதி பிரபா தற்போது கருணா அணியினர் மீதான நடவடிக்கைக்கான தாக்குதலை ஒருங்கிணைப்பதுடன், பால்சேனைக்கு அருகிலுள்ள கட்டளைப் பணியகம் மற்றும் முன்னணி அரண்களை வழிநடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 600 பேர் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை அடுத்த கதிரவெளிப்பிரதேசத்தில் இருந்து 240 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 600 பேர் திருகோணமலை மூதூர் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெருகல் ஆற்றுப்பகுதியூடாக வந்த இவர்கள் ஈச்சிலம்பற்று சண்பகா மகா வித்தியாலத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 6 லட்சம் பெறுமதியான நிவாரணப்பொருட்கள் திருகோணமலை மாவட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இணைந்து கொள்ளுமாறுகோரிக்கை

## அரசியற்துறை அறிக்கை

(கிளிநொச்சி)

பொதுமக்களையும், போராளிகளையும் பாதுகாப்பதற்காக, கருணாவை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் -

வீண் இழப்புக்களைத் தவிர்க்க எஞ்சியுள்ள போராளிகளை இணைந்துகொள்ளுமாறு கோரும் அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நேற்றுமாலை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணா தொடர்ந்தும் தலைமைப்பீடத்திற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 31 புதிய அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்றனர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை, நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவியேற்றது. பதவியேற்ற அமைச்சர்களும் அமைச்சுக்களின் விபரமும் வருமாறு-

பெருந்தெருக்கள் அமைச்சர் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கைத்தொழில், சுற்றுலா, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் - அநுரா பண்டாரநாயக்க

தபால் தொலைத் தொடர்புகள் மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் - டி.எம்.ஜெயரத்ன

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் - அமரசிறி தொடங்கொட

சுகாதார நலன் மற்றும் போஷாக்கு அமைச்சர் - நிமால் சிறீபால டி சில்வா

விமானப் போக்குவரத்து மற்றும் துறைமுக அமைச்சர் - மங்கள சமரவீர

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர் - ஏ.எச்.எம்.பௌசி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிதி மோசடி குறித்து


# அவதானமாக இருக்குமாறு நிதித்துறையினர் அறிவிப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரைப்பயன்படுத்தி நிதி மோசடிகள் இடம்பெற்று வருவதால் இது பற்றி மக்களை விழிப்புடன் இருக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

கொள்ளையரும் சமூகவிரோதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப்பயன்படுத்தி வீடுவீடாகச் சென்றும் கடைகடையாகச் சென்றும் நிதி திரட்டிவருவதற்கான சான்றுகள் எமக்குக்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## மாகாணமட்ட மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

திருமலை மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் இலங்கை மேசைப் பந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து நடாத்தும், வடக்கு கிழக்கு மாகாண மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இந்தமாதம் 24, 25 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

மேசைப்பந்தாட்டத்தை வட-கிழக்கில் விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மேசைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்தப் போட்டியில், வயதுக் கட்டுப்பாடு மற்றும் திறந்த போட்டிகளாக இரண்டு நிலைகளில் இடம்பெறவுள்ளன. எனவே, இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்க உறுப்பினர்களை, பாடசாலை விளையாட்டு வீர, வீராங்கனைகளை இந்தமாதம் 19 ஆம் திகதிக்கு முன்பாக சங்கச் செயலாளர் ஜே.மோகனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (205)

பண்டிகைக்கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் எமத புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசிமகிழ விசேட சலுகை

ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=

இச் சலுகை நாளை 12. 04. 2004 தொடக்கம் 16. 04. வரை மட்டுமே

திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ. சங்கம் முன்பாக)
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
T.P 021 222 7310, 7555, 7560,
Fax: 021 222 7310
E.Mail: thirumurugan@edoramail.com

(சி/2450)

# வன்முறைகள் இன்றி சுதந்திரமாக நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் மாவை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த பொதுத்தேர்தலைவிட இந்தமுறை நடைபெற்ற பொதுத் தேர்தல், வன்முறைகள் எதுவுமின்றி சுதந்திரமாக நடைபெற்றது.

இவ்வாறு தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

குடாநாட்டில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளரை தமிழரசுக்கட்சியின் செயலாளர் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் 13ஆவது நடாளுமன்றத்தேர்தல் யாழ்.மாவட்டதேர்தல் தொகுதியில் எந்தவித வன்முறையும் இன்றி சிறப்பாக நடைபெற்றுள்ளது. சென்ற முறை ஊர்காவற்துறை போன்ற பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் வன்முறை சம்பவங்கள்போல் இந்த முறை நடைபெறவில்லை.

வாக்காளர்களை தனியார் பஸ்களில் ஏற்றிச் சென்று வாக்களிக்க போக்குவரத்து உதவி மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு தவறான செயற்பாடாக நான் கருதவில்லை. யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு செய்யப்பட்ட போக்குவரத்து வசதிகள் எதுவும் போதியதாக இருக்கவில்லை. இதன் காரனத்தினால் வாக்காளர் நன்மை கருதி வாக்களிக்க தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக யாவரும் அறிந்ததே. இந்தமுறை யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகள் சுதந்திரமான முறையில் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் தமது முகவர்களை நிறுத்தி இருந்தனர். இவ்வாறான சுதந்திரம் பன்னிரண்டாவது தேர்தலில் கிடைக்கவில்லை.

குறிப்பாக தென்னிலங்கையை விட யாழ்.மாவட்டத்தில் தேர்தல் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது. இருபது வருடங்களுக்கு மேலாக வாக்களிக்கமுடியாது இருந்த மக்கள் இந்தமுறை தேர்தலில் வாக்களித்தனர். இதற்கு உதாரணமாக கிளிநொச்சிப்பகுதியில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

சில வாக்களிப்பு நிலையத்தில் பொலிஸார் வாக்களிப்பு அட்டையுடன் வந்த மக்களின் அடையாள அட்டைகளைப் பார்வையிட்டுள்ளனர். இதன் காரணத்தினால் சில மக்கள் வாக்களிக்காது சென்றுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கூறியிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

### மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சோமசுந்தரம் சிவநேசன் என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மேற்-50 இனத்தைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக நிறுத்திவிட்டு அரைமணிநேரம் கழித்தபின்னர் மோட்டார் சைக்கிளை வந்து பார்த்த போது மோட்டார்சைக்கிள் காணாமல் போயிருந்தாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இரத்தினம் முருகரூபன் (அடையாள அட்டை இல.750103120 V) என்பவரது பணப்பை திக்கத்திலிருந்து - முகமாலை செல்லும் வழியில் நேற்று (10.04.2003) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உப்புக் கிணற்றடி, அல்வாய் மேற்கு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (சி.2457)

மலிவு விற்பனை

மில்க்வைற் சோப் 6 ரூபாவாக தொழிற்சாலையிலும், எமது விற்பனை வாகனத்திலும், பெற்றுக் கொள்ளலாம்.
மில்கவைற்
த.பெ.இல 77,
யாழ்ப்பாணம். (சி/2456)

திருமணசேவை

சக்தி திருமண சேவை-யாழ்-கொழும்பு, இந்திய வம்சாவளி, இந்து, R.C, உள்நாட்டு வெளிநாட்டுத் திருமண சேவை மூலம் மணமக்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
Shakthi Marrige Private Services,
30,Ramani Mawatha, Negombo, Srilanda.
T.P : 0777043138, 031-2232130. (669)

கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம்
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
விபரங்கள் அறிய
யசோ
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2395)

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும ஒரேதின வெளியீடாக விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த A.R. ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
(சி-2397)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சேரன், ரதி நடித்த
சொல்ல மறந்த கதை
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Maid in Man Hattan
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந்த் நடித்த
உன்னை பார்த்த நாள் முதல்...
காட்சி நேரம்:-10.30,



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
கில்லி
(சி-2387)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

அன்புக்கு அணிகலனாய் ,பாசத்தின் இருப்பிடமாய்,
பொறுமையின் பொக்கிஷமாய்,சுமைதாங்கியாய் வாழ்ந்து
எமது இதயத்தில் என்றும் அணையாத் தீபமாய் சுடர் வீசும்,
மறைந்தும் மறையாத எம் அன்புத் தெய்வம்

அமரர்

## கந்தையா தனபாலசிங்கம்

(மின்மாணிவாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, மின் பாவனையாளர் சேவை நிலையம், நகரப் பணிமனை, யாழ்ப்பாணம்)

தோற்றம் 16.03.1947

மறைவு 16.03.2004

16.03.2004 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **கந்தையா தனபாலசிங்கம்** அவர்களின் வீட்டுக் கிரியைகள் பங்குனி மாதம் 29ம் நாள் (11.04.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இல: 14/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மீளக் குடியமர்வதற்கு படைத் தரப்பு அனுமதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்குப் பகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர்வதற்குக குறித்த சில குடும்பங்களுக்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முதற்கட்டமாக ஒருதொகுதியினர் மறவன்புலோ தோப்பு பிள்ளையார் கோயிலடியிப் பகுதியில் - எதிர்வரும் புத்தாண்டன்று மீளக்குடியமர அனுமதிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனைவிட, கைதடி நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 40 குடும்பங்களும், கோவிலாக் கண்டியைச் சேர்ந்த 12 குடும்பங்களும் அடுத்த கட்டமாக மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர்.

ஆனால், இந்த 52 குடும்பங்களும் மீளக் குடியமர்வது தொடர்பான எவ்வித அறிவித்தலும் தமக்குப் படையினரால தெரிவிக்கப்படவில்லையெனத் தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு சபாநாயகரிடம் கலந்துரையாடப்படும்!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுபினர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் சபாநாயகருடன் கலந்துரையாடவுள்ளதாக தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு நாட்களில் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழு, கொழும்பில் கூடியிருந்தவேளையில் மட்டக்களப்பு - அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக சென்றிருந்த இராணுவத்தினர் கூட்டத்திற்கு இடையூறாக அங்கிருந்த கிழக்கு மாகாண 4 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பலவந்தமாக அழைத்துச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து செய்தி ஊடகம் ஒன்றுக்கு கருத்துதெரிவித்தபோதே மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்வதற்கு முன்னர் நாம் அமையவுள்ள அரசுடனும், எதிர்க்கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்தும்போது பேசவேண்டிய விடயம் குறித்து கலந்துரையாட தீர்மானித்திருந்தோம். இதன்போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிலைமைகள் குறித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்திருந்தோம். இதற்காக அந்த மாவட்டத்திலிருந்து தெரிவானவர்களும் வந்திருந்தார்கள்.

இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக வந்திருந்த இராணுவத்தினர் இரண்டு நாளாகிவிட்டது என்றும், இவர்களை அழைத்துச் சென்று மட்டக்களப்பில் விடுவதற்கு தாம் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அவர்களுடன் கலந்துரையாட இருப்பதனால் அவர்களை உடன் அனுப்பமுடியாதுள்ளதாகவும், இராணுவப் பாதுகாப்புத் தேவையில்லை என்றும் திரும்பிச் செல்லுமாறும் இராணுவத்தினருக்குத் தெரிவிக்கப்



பட்டது.

அத்துடன், இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமா, இல்லையா என்பதை அவர்களும் நாங்களும் தான் முடிவுசெய்யவேண்டும். இராணுவத்தினரின் பாதுகாப்புத் தேவையில்லை எனவும் பலகல்லவிடம் தொடர்பு கொண்டு தெரிவித்தோம்

எனினும் படைத்தரப்பினர் அவர்களைப் பலவந்தமாக அழைத்துச்சென்றுள்ளனர். இந்த விடயம் குறித்து அரசாங்கம் அமைந்த பின்னர் சபாநாயகரிடம் தெரிவிக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

# புனர்வாழ்வு அமைச்சுப் பொறுப்பை டக்ளஸ் தேவானந்தா கோருகிறார்



புனர்வாழ்வு அமைச்சருக்கான பொறுப்பு தனக்கு வழங்கப்படவேண்டுமென டக்ளஸ் தேவானந்தா - ஜனாதிபதியைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் புனர்வாழ்வு அமைச்சு மீண்டும் டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருப்பதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்போது, அவர்கள் டக்ளஸ் தேவானந்தாவை புனர்வாழ்வு அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு நிபந்தனை விதிக்கலாம் என்ற காரணத்தினாலேயே, டக்ளஸ் தேவானந்தாவை புனர்வாழ்வு அமைச்சராக நியமிப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எது எவ்வாறாயினும், இந்தப் பதவிக்கான பொறுப்பை யாரிடமும் வழங்காது, தனது கடடுப்பாட்டின் கீழேயே ஜனாதிபதி வைத்திருக்க விரும்புவதாக மேலும் விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நகரின் சில வீதிகள் வாகனப் போக்குவரத்துக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் இருந்து ஆரம்பிக்கும் மின்சார நிலைய வீதி புதுவருடத்தை முன்னிட்டு தற்காலிகமாக வாகனப் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்.நகரப் பகுதியில் மக்கள் கூட்டம் அலை மோதுவதனால் விபத்துக்களை தவிர்ப்பதற்கு காங்கேசன்துறை வீதியில் இருந்து ஆரம்பிக்கும் மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதிவரை வாகனப்போக்குவரத்து பகல் வேளைகளில் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றைவிட யாழ்.நகரை அண்டிய முக்கிய சந்திகளில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவற்றைவிட பொலிஸார் சாதாரண உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது.

# தர்மராஜ்ய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராம்!

## ஹெல உறுமய தெரிவிப்பு

தர்மராஜ்ய அடிப்படையிலான அரசாட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்றுக்கொள்ளுமானால், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குத் தாம் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கண்டி தலதாமாளிகைக்கு நேற்று விஜயம் செய்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய பேச்சுக்களின்போது, நாட்டின் பாதுகாப்பு, சமாதானப் பேச்சுக்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து அரசாங்கம் தீர்வை முன்வைக்கும்போது, அது குறித்து எமக்கு முன்னதாகவே தெரியப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குவது குறித்து இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை.

அத்துடன் அரசாங்கத்தில் பங்காளியாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இயங்கப்போவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# மகாவலி அபிவிருத்தி அமைச்சையும் ஜே.வி.பி தனக்கு தருமாறு கோருகிறது

(கொழும்பு)

காணி, விவசாயம், நீர் விநியோகம், கிராமியப் பொருளாதாரம் ஆகிய அமைச்சுக்களைக் கோரிய ஜே.வி.பி. கட்சி, மகாவலி அபிவிருத்தித் துறையையும் தன்வசம் தருமாறு கோரியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜே.வி.பிக்கு நான்கு அமைச்சுக்களும், அவற்றிற்குரிய பிரதியமைச்சுக்களையும் வழங்குவற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி சம்மதம் தெவித்திருந்தது.

இந்த நிலையில், மேலதிக ஒரு அமைச்சை ஜே.வி.பி. கோரியுள்ளது. இது தொடர்பாக விமல் வீரவன்ச, சுனில் பிரேம் ஜயந்த ஆகியோருக்கிடையில் நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இந்தப் போச்சுவார்த்தையில் எதுவித இணக்கமும் ஏற்படவில்லை. எனினும், தொடர்ந்து பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது.

ஜே.வி.பியிடம் மகாவலித்துறையை விட்டுக்கொடுப்பதா என்பது தொடர்பாக விரைவில் முடிவெடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. (01)

# அரசியல் அமைப்பு திருத்த நடவடிக்கைக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவை அளிக்காது!

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையுடன் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின்போது, அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு இலங்கை முஸ்லிம் காங்கிரசினால் எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பை திருத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்றை முன்வைத்தால் அதற்கு எவ்வித ஆதரவும் வழங்கப்போவதில்லை என காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும், புதிய அரசுக்கு ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்தாலும் அதற்கு முன்னர் அரசின் செயற்பாட்டை அவதானித்து எவ்வித தீர்மானத்தை எடுத்தாலும் அது முஸ்லிம் மக்களின் நன்மைக்காகவே எடுக்கவேண்டும் என்று இந்தக் கலந்துரையாடலின்போது, முடிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை தீர்ப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும் என்று உறுதிபூண்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை -

முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் ஹசன் அலி, கே.பாயிஸ் ஆகிய இருவரும் முஸ்லிம் காங்கிரசின் தேசிய பட்டியலில் உறுப்பினர்களாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் அறியவந்துள்ளது.

# சாவகச்சேரி நகரப் பகுதியில் புதிய படைமுகாம் அமைப்பு!

(சாவகச்சேரி)

கடந்த சில நாட்களாகச் சாவகச்சேரி பிரதான பேருந்து நிலையப் பகுதியில் முகாம் அமைக்கும் பணியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பழைய பொலிஸ் நிலையம் அமைந்திருந்த பகுதியில் பற்றைகளை வெட்டி, புதிய முகாம் அமைப்பதற்கான செயற்பாட்டில் - முப்பதிற்கும் மேற்பட்ட படையினர் இரவு பகலாக ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், தென்மராட்சிப் பகுதியில் படையினரது ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதும், காவலரண்கள் புனரமைக்கப்படுவதும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஆ)

# ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளருக்கு 28 ஆம் திகதிவரை விளக்கமறியல்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த பொதுத்தேர்தல் வேட்பாளர் பி.பி. எக்கநாயக்கவுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.ம.சு.மு. ஆதரவாளர்களைக் கொண்ட குழுவைத் தாக்கி, வான் ஒன்றைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டதாக தெரியவருகிறது. சந்தேக நபரை கெபிற்றி கொல்லாவ நீதிவான் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# கொழும்பில் மீண்டும் படையினர் சோதனை

(கொழும்பு)

கொழும்பில் பல பகுதிகளில் மீண்டும் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு படையினர் மீண்டும் வாகனங்களை மறித்து சோதனையிடும் நடவடிக்கையும் ஆரம்பித்துள்ளனர்.

மீன்கடை கட்டடத் தொகுதிக்கருகில் உள்ள சோதனைச்சாவடி, புறக்கோட்டை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகிலுள்ள சோதனைச்சாவடி, தெஹிவளை பாலத்துக்கு அருகிலுள்ள சோதனைச் சாவடி உட்பட பல இடங்களில் வாகனங்கள் மறிக்கப்பட்டு படையினரால் சோதனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்குமுன்பாகவும், முக்கிய பகுதிகளிலும் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# நிதி அமைச்சின் செயலராக மனோ தித்தவெல நியமனம்

நிதியமைச்சின் புதிய செயலாளராக மனோ தித்தவெல்ல நியமிக்கப்படவிருப்பதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஜனாதிபதியின் பொருளாதார நடவடிக்கைகள் சம்பந்தமான ஆலோசகராக கடமையாற்றும் தித்தவெல்ல, கடந்த பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் காலத்தில் மக்கள் வங்கியின் தலைவராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் போட்டிகளில் வலிமை மிக்கதொரு அணியாக இந்தியா விரைவில் உருவாகும்!

## தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் தெரிவிப்பு

'டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி விரைவில் வலிமை மிக்க அணியாக உருவாகும்' என்று தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் அலிபாச்சர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அலிபாச்சரின் சுயசரிதை அடங்கிய புத்தகத்தின் வெளியீட்டு விழா நிகழ்ச்சி மும்பையில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அலிபாச்சர் நிருபர்களிடம் கூறியதாவது-

எனக்கு பிடித்தமான துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் டொன் பிரட்மன் அவருக்கு அடுத்தபடியாக எனது மனதை கவர்ந்தவர் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர்தான்.

டெண்டுல்கரை 13 வருடங்களுக்கு முன் 1991ல் நான் சந்தித்தேன். அப்போது டெண்டுல்கர் எப்படி இருந்தாரோ அதே போல்தான் அவர் இப்போதும் உள்ளார். ஆட்டத்தின் மீது அவர் கொண்டுள்ள பற்று அவ்வளவு கூட மாறவில்லை அப்படியே உள்ளது.


கப்டன் கங்கூலியும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அவுஸ்ரேலிய பயணத்தின் போது இந்திய அணியை கங்கூலி சிறப்பாக வழி நடத்தி அந்த அணிக்கு நெருக்கடியைக் கொடுத்தார்.

டெஸ்ட்போட்டியில் இந்திய அணியைப் பற்றி சொல்லப்போனால் முதல் 7 துடுப்பாட்டக்காரர்களும் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வண்ணம் உள்ளனர். இந்திய அணியின் ஆட்டத்தில் மெருகேறி உள்ளது. எனவே, விரைவில் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வலிமை மிக்க அணியாக உருவாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான போட்டித் தொடர் நல்ல முயற்சிக்காக தொடங்கப்பட்டது. அது தொடங்கியது போல் சிறப்பாகவே நடந்துவருகிறது. என அலிபாச்சர் கூறினார்.

# மூன்றாது டெஸ்ட் போட்டி உமர் -குல் ஆடவில்லை!

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவர் உமர்குல். 2 ஆவது டெஸ்டில் பாகிஸ்தான் வெற்றிக்கு



இவரது பந்துவீச்சு முக்கிய காரணமாக இருந்தது.

காயமடைந்து உள்ளதால் 3 ஆவது டெஸ்டில் அவர் விளையாடவில்லை. இதே போல சபீர் அகமட்டும் காயம் காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

கடைசி டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணி வருமாறு -

இன்ஸமாம்(கப்டன்),யுகானா, தபீக்உமர், இம்ரான்பர்கத், யாசிர்ஹமீத்,ஆசிம் கமால், கமரன் அக்மல், முகமது சமி, சொகைப் அக்தர்,ரானா நவீத், டேனிஷ் கனேரியா, மிசாபா-உல்- ஹக்,இம்ரான் நசீர், சோயிப் மாலிக் ,பசல்-இ- அக்பர், இப்திகார், அப்துல் ரஷப்.

# ஐ.சி.சி டெஸ்ட் தொடர் தரவரிசையில் 3 ஆம் இடத்தைப் பிடிக்குமா இந்தியா?

டெஸ்ட் கிரிக்கெட்அணிகளின் வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. இதில் 127 புள்ளிகளைப் பெற்றுள்ள அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து முதலிடத்திலுள்ளது. 112 புள்ளிகள் பெற்றுள்ள தென்னாபிரிக்கா 2 ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 102 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலுள்ளது. 101 புள்ளிகள் பெற்றுள்ள நியூசிலாந்து 4 ஆவது இடத்திலும், அதே புள்ளிகள் பெற்றுள்ள இங்கிலாந்து 5 ஆவது இடத்திலுமுள்ளது.

100 புள்ளிகள் பெற்றுள்ள இந்தியா 6 ஆவது இடத்திலுள்ளது. இலங்கை 94 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியதீவுகள் 82 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்திலும், சிம்பாபவே 55 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் ஒரு புள்ளியுடன் 10 ஆவது இடத்திலும் உள்ளன. தற்போது 3 ஆவது இடத்தைப் பிடிக்க 3 அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது. அதாவது, பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆவதுடெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றும் பட்சத்தில் இந்தியா 102 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்துக்கு முன்னேறும். 3 ஆவது இடத்தில் இருக்கும் பாகிஸ்தான் அணி பின்னுக்கு தள்ளப்படும்.


மாறாக 3 ஆவது டெஸ்டில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றால் 105 புள்ளிகளுடன் அதே 3 ஆவது இடத்தை தக்கவைத்துக்கொள்ளும்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றால், அந்த அணி 104 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திற்கு முன்னேறும். மாறாக இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தாலும் அந்த அணி 103 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்தைப் பிடிக்கும்.

# ராவல் பிண்டி டெஸ்ட் போட்டி தொர்டக்க வீரராக யுவராஜ்சிங்

இந்திய கிரிக்கெட் அணி - பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கிடையேயான மூன்று டெஸ்ட் போட்டித் தொடரில், முல்தானில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



லாகூரில் நடந்த இரண்டாவது டெஸ்ட்டில் பாகிஸ்தான் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

டெஸ்ட் தொடர் யாருக்கு என்பதை நிர்னயிப்பதற்கான கடைசி டெஸ்ட் நாளை மறுதினம் ராவல் பிண்டியில் தொடங்குகிறது.

காயம் காரணமாக முதல் இரண்டு டெஸ்ட்டில் விளையாடாத கப்டன் கங்கூலி இந்த டெஸ்ட்டில் ஆடுகிறார்.

முழு உடற்தகுதிபெற்ற அவர் - நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டார்.

முதல் இரண்டு டெஸ்ட்டில் கங்கூலி ஆடாததால், யுவராஜ்சிங்கிற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. தற்போது கங்கூலி கடைசி டெஸ்ட்டில் விளையாட இருப்பதால், யுவராஜ் நீக்கப்படுவது வாடிக்கையானது.

ஆனால், லாகூரில் நடந்த இரண்டாவது டெஸ்ட்டில் சதம் அடித்ததால் அவரை நீக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடைசி டெஸ்ட்டிலும் அவர் ஆடுகிறார்.

இதனால் அணியிலுள்ள ஒரு வீரர் நீக்கப்படுகிறார். தொடக்க ஆட்டக்காரர் ஆகாஷ் சோப்ரா, மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் லட்சுமன் ஆகியோர் நல்லநிலையில் இல்லை. இருவரில் ஒருவர் நீக்கப்படலாம்.

லக்ஸ்மன் அனுபவம் வாய்ந்தவர் என்பதால், ஆகாஷ் சோப்ரா நீக்கப்பட அதிக வாய்ப்பு இருக்கிறது.

அவர் நீக்கப்படும் பட்சத்தில் ஷேவாக்குடன் தொடக்க வீரராக யுவராஜ் சிங்கை அனுப்பலாமா என்று அணி நிர்வாகம் யோசித்து வருகிறது.

அதேநேரத்தில் கப்டன் கங்கூலி தொடக்க வீரராக ஆடவும் வாய்ப்பு இருக்கிறது.

ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்து ஷேவாக்குடன் யார் தொடக்க வீரராக ஆடுவார் என்பது தெரியும்.

யுவராஜ் சிங் தொடக்க வீரராகக் களமிறங்க அதிக வாய்ப்புள்ளது.

# போபர்ஸ் ஊழல் புகார் நாங்கள் நிரபராதிகள்!

## ராகுல் காந்தி விளக்கம்

போபர்ஸ் வழக்கில் நாங்கள் நிரபராதிகள் என்று ராகுல் காந்தி கூறியிருக்கிறார்.

போபர்ஸ் பீரங்கி வாங்கியதில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீது குற்றம்சாட்டப்பட்டது. ஆனால்,அவர் நிரபராதி என்று டெல்கி உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டது.

இதற்கிடையே இந்தவழக்கில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை விசாரிக்க வேண்டும் என்று சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு பொலிஸ் அதிகாரி தெரிவித்ததாக செய்தி வெளியாகியிருக்கிறது. இதன் காரணமாக பாரதீய ஜனதா கட்சியினர் போபர்ஸ் பிரச்சினையை மீண்டும் கிளப்பத் தொடங்கியிருக்கிறார்கள். சோனியாவையும் அந்த வழக்குடன் தொடர்புபடுத்தி பேசிவருகிறார்கள். பாரதீய ஜனதா கட்சியின் இந்த நடவடிக்கைக்குப் பதில் அளிக்கும் விதத்தில் ராகுல் காந்தி நிருபர்களுக்கு பேட்டி அளித்து இருக்கிறார்.

போபர்ஸ் வழக்குடன் எங்களுக்கு தொடர்பு இல்லை என்று கடந்த 18 ஆண்டுகளாக கூறி வருகின்றோம். இதில் நாங்கள் நிரபராதிகள்.

பாரதீய ஜனதாவுக்கு பிரச்சினைகள் சிக்காதபோதெல்லாம், போபர்ஸ் விவகாரத்தை கிளப்பிவிடுவார்கள். இவை வெறும் அரசியல் ஸ்டண்ட். தேர்தல் நேரத்தில் பொதுமக்களை ஏமாற்றும் வேலையாகும்.

நாங்கள் வீட்டை விட்டு வெளியே வந்தாலே போபர்ஸ் விவகாரமும் வெளியே வந்து விடும. கடந்த 18 ஆண்டுகளாக அந்த வழககை கவனித்து வருகிறீர்கள். உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். இதில் நான் சொல்வதற்கு எதுவும் இல்லை. இவ்வாறு ராகுல்காந்தி கூறினார்.

# அத்வானியும், ஜெயலலிதாவும் உடன் பதவி விலக வேண்டும்!

பொடா மனு ஆய்வுக் குழுவின் தீர்ப்பை மதித்து முதல்வர் ஜெயலலிதாவும், துணைப்பிரதமர் அத்வானியும் உடனடியாகத் தங்களது பதவிகளை ராஜினாமா செய்யவேண்டும் என்று, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாண்டிச்சேரியில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் - வைகோ, உள்ளிட்டவர்கள் மீதான வழக்கில் பூர்வாங்க ஆதாரம் இல்லை என்று பொடா மறு ஆய்வுக்குழு கூறியுள்ளது. இதனால் வழக்கைப் போட்ட ஜெயலலிதா தனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும்.

பொடா சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதை எந்த மாநில அரசாவது தவறாகப் பயன படுத்தினால் மத்திய அரசு தட்டிக்கேட்கும் என்று அத்வானி நாடாளுமன்றத்தில் முழங்கினார்.

ஆனால் ஜெயலலிதா அரசு செய்த இந்த மாபெரும் தவறை தட்டிக்கேட்காமல் அமைதி காக்கிறார். இதனால் இப்போதைய தீர்ப்பை மதித்து அவரும் பதவி விலகவேண்டும்.

பொடா மறுஆய்வுக்குழுவின் தீர்ப்பை அடிப்படையாக வைத்து தமிழக அரசுமீது மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவோம் என்றார் அவர்.

# வேட்பாளருக்கு மிரட்டல் கசட்; வீரப்பன் தேடுதல் தீவிரம்!

கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளருக்கு வீரப்பன் மிரட்டல். 'கசட்' அனுப்ப முயன்றதாக வெளியான தகவலையடுத்து, வீரப்பன் வேட்டையை அதிரடிப்படை பொலிஸார் தீவிரமாக்கியுள்ளனர். கொள்ளேகால் சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் ஒரு வேட்பாளருக்கு வீரப்பன் மிரட்டல் 'ஓடியோ கசட்' அனுப்பியதாகத் தகவல்கள் வெளியானது. இதனால் கர்நாடகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோது, 'கசட்' வந்துசேரவில்லை என்றும், ஆனால் 'கசட்' அனுப்ப வீரப்பன் தரப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவந்தது.

இதையடுத்து அதிரடிப்படை வீரர்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். கர்நாடக மற்றும் தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மீண்டும் தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டுள்ளனர்.

பாலாறு, கார்க்கேகண்டி, ராமாபுரம், தடம்பூர் உள்ளிட்ட வனப் பகுதிகளில் அதிரடிப்படை வீரர்கள் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றார்கள்.

வனப்பகுதிகளின் அருகே மாலை நேரத்திற்கு மேல் பிரசாரத்துக்கு போகவேண்டாமென வேட்பாளர்களை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

# போபர்ஸ் ஊழலின் உண்மை வெளிக் கொண்டுவரப்படும்!

## வெங்கையா நாயுடு பேட்டி

'போபர்ஸ் ஊழலின் உண்மையை வெளிக்கொண்டுவந்தே தீருவோம்' என்று பாதீய ஜனதா கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு கூறினார்.

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இந்திய ராணுவத்துக்கு சுவீடன் நாட்டைசேர்ந்த போபர்ஸ் நிறுவனத்திடம் இருந்து பீரங்கிகள் வாங்கப்பட்டன.

போபர்ஸ் நிறுவனத்திடம் இருந்து பீரங்கிகளை வாங்கிய போது இந்திய அரசியல் தலைவர்களுக்கு ரூ.63 கோடி கொடுக்கப்பட்டதாக ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டது.

18 ஆண்டுகளாக அமுங்கிபோன இந்தக் குற்றச்சாட்டு தற்போது தேர்தல் நேரத்தில் மீண்டும் தலைதூக்கி இருக்கிறது. இது குறித்து கொல்கத்தா நகரில் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு நிருபர்களிடம் கூறியதாவது -

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீண்டும் பதவி ஏற்றதும், போபர்ஸ் ஊழலின் உண்மைகளை வெளியே கொண்டுவருவோம். இதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.

இது ஒரு தேசியப் பிரச்சினை. தற்போது வெளியாகி இருக்கும் கூடுதல் விபரங்கள், போபர்ஸ் விவகாரத்தில் மேலும் உண்மைகளைப் பெற வாய்ப்பாக அமையும்.

போபர்ஸ் விவகாரத்தில் இடதுசாரி கட்சிகளின் நிலை என்ன? என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் ராமர்கோயில் கட்டுவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை ராமர்கோயில் கட்டுவது அரசின் வேலை அல்ல.

ராமர்கோயில் பிரச்சினை நீதிமன்றம் மூலம் அல்லது இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் விரைவில் தீர்க்கப்படும். இந்தத் தீர்வு அனைவரும் ஏற்கும் தீர்வாக இருக்கும். இந்தப் பிரச்சினையில் நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு இருக்க முடியாது. இவ்வாறு வெங்கையா நாயுடு கூறினார்.

# அடையாள அணிவகுப்பின்போது சந்தேக நபர் இனங்காணப்பட்டனர்

வரணி வடக்குப் பகுதியில் கடந்த தேர்தல் வாக்களிப்புத் தினத்திற்கு மறுநாள் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆறு நபர்கள் - சாவகச்சேரி நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

பதில் நீதிவான் சு.கந்தசாமி முன்னிலையில் நடைபெற்ற அணிவகுப்பில் மூன்று பேர் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

இதனையடுத்து ஆறு சந்தேக நபர்களையும் ஏப்ரல் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

அரசியல் கட்சி ஒன்றின் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட வரணி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவஞானம் என்பவர் கடந்த மூன்றாம் திகதி காலை பத்திற்கும் மேற்பட்டவர்களால் தாக்கப்பட்டதாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினையடுத்து, ஆறு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

நீதிமன்ற நீதவானின் உத்தரவின்பேரில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டபோது, மூன்று சாட்சிகள் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் மூவரை அடையாளம் காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (34)

## வருடாந்த குளிர்த்தி விழா

மாகியப்பிட்டி அங்கனம்மைக் கடவை கண்ணகைஅம்பாள் ஆலய வருடார்ந்த குளிர்த்திவிழா நாளை காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முதல்நாள் கண்ணகை அம்மன் படிப்பு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

# பஸ் போக்குவரத்து ஒழுங்கீனத்தால் பருவகால சீட்டை பெற்ற பயணிகள் அவதி

யாழ்.குடாநாட்டில் பஸ்ஸில் பயணம் செய்வதற்குப் பருவகாலச் சீட்டைப் பெற்றவர்கள் - குறிப்பிட்ட நேரத்திற்குத் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது.

யாழ். குடாநாட்டில் சீரான பஸ் போக்குவரத்துக்குக் குறைந்தது 60 பஸ்கள் தேவைப்படுகின்றன. எனினும், தற்போது 47 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன.

குறிப்பாகக் கிழமை நாட்களில் பாடசாலைச் சேவைகளில் 37 பஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பருவகால சீட்டையைப் பெற்றுக்கொண்ட குறிப்பாக பாடசாலை மாணவர்களும், அரச ஊழியர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பயணங்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக பருவகாலச் சீட்டை எடுத்தவர்களும் தனியார் பஸ்களில் தமது பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்களில் ஒரு பஸ்கூட பழுதடைந்தால், அதற்குப் பதிலாக வேறு ஒரு பஸ்ஸை அனுப்ப முடியாதுள்ளது. அவ்வாறு புதிய பஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டால், வேறு ஓர் பஸ் சேவை பாதிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ்.குடாநாட்டில் உள்ள மக்கள் குறிப்பாக பாடசாலை மாணவர்களும், அரச ஊழியர்களும் பெரும் சிரமங்ளை எதிர்நோக்குகின்றனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

### ஏப்ரல் மாதத்திற்கான

# ஓய்வூதிய பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது

தென்மராட்சிப் பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுடைய ஏப்ரல் மாத ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் பிரதேச செயலகத்தில் வைத்து ஓய்வூதியர்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டன.

2004.04.06,07 ஆம் திகதிகளில் பெருமளவிலான ஓய்வூதியர்கள் தமது பற்றுச்சீட்டுக்களை நேரடியாக வந்து பெற்றதாகவும், எழுந்து நடமாடமுடியாத நிலையிலுள்ள நோயாளர், வயோதிபர் ஆகியோரது பற்றுச்சீட்டுக்கள் கிராம அலுவலரது சிபார்சுடன், அவர்களது பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சியுள்ள ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் வழங்கப்படும் என அறியமுடிகின்றது.

ஓய்வூதியக் கொடுப்பனவில் இடம்பெறும் மோசடிகளைக் கண்டறிவதற்காக மாவட்டச் செயலகத்தின் உத்தரவின்பேரில் இந்தப் பணி பிரதேச செயலகங்கள்மூலம் நடைமுறைப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (34)



கடந்த மாதம் நடைபெற்ற கச்சதீவு உற்சவத்தின்போது கலந்துகொண்ட இலங்கை - இந்தியக் குருமார்களும், தமிழ்நாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் படத்திற் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : சுமங்கலா
முகவரி : கரவெட்டி வடக்கு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடகம்

வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளை செயல்திறன் அரங்க இயக்கம் சென்ற ஆண்டிலிருந்து முன்னெடுத்து வருகின்றது.

சிறுவர் அரங்கு தொடர்பான கருத்தரங்கள், களப் பயிற்சிகள் பல கல்வி வலயங்களில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

தற்போது ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மேடையேற்றுவதற்காக 'பஞ்ச வர்ண நரியார்' சிறுவர் அரங்கிற்கான நாடகமொன்றைத் தயாரித்துள்ளனர்.

ஈழத் தமிழ் அரங்கில் சிறுவர் அரங்கிற்கான நாடக எழுத்தாளராகத் திகழ்கின்ற குழந்தை ம.சண்முகலிங்கம் 'பஞ்ச வர்ண நரியார்' நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்துள்ளார். செயல்திறன் அரங்க இயககம் இந்த நாடகத்தை தயாரித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள நூறு ஆரம்ப் பாடசாலைகளில் 'பஞ்ச வ்ர்ண நரியார்' நாடகம் மேடையேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மேடையேற்றம் மே 2004 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகும்.

பஞ்ச வர்ண நரியார் நாடக ஆற்றுகை ஆரம்பப் பாடசால ஆசிரியர்கள், அதிபர், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இந்த நாடகத்தைக் கட்டணம் செலுத்திப் பார்வையிடலாம். நாடகத்தைப் பாடசாலைகளில் மேடையேற்ற விரும்புவோர் செயல் திறன் அரங்க இயக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூர்ச் செய்திகள்

## விதவைகளுக்கு சுயதொழிற் கடன்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலப் போர் காரணமாக விதவையாக்கப்பட்டவர்களுக்கு மன்னார் துயர்துடைப்பு நிறுவனத்தினரால் சுயதொழிற் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கணவனை இழந்த 15 குடும்பங்களுக்கு வண. பிதா அ.சேவியர் குறூஸினால் ரூபா ஐயாயிரம் முதல் 15 ஆயிரம் வரையான சுயதொழிற் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. (201)

## முறைசாராக் கல்வி ஆரம்பம்

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் இந்த வருடம் முதன் முதலாக முறைசாராக் கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் கற்கைநெறியின்கீழ் உடையமைத்தல் பிரிவு எதிர்வரும் (15.04.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முற்றிலும் இலவசமாக நடைபெறும் இந்தக் கற்கைநெறியில் பங்குபற்றும் மாணவருக்கு வேண்டிய உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படுவதுடன், பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

## புகையிலை செடிகளில் எரிநோய்த் தாக்கம்

(உடுவில்)

இணுவில், உடுவில் பகுதிகளில் இந்தமுறை புகையிலைச் செடிகளில் எரிநோய்த் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உருளைக்கிழங்குச் செய்கை பண்ணப்படும் தோட்டங்களிலிருந்தே இந்த நோய்த்தாக்கத்திற்குரிய பூச்சிகள் பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் உருளைக்கிழங்கு உற்பத்தியாளருக்கும், புகையிலை உற்பத்தியாளருக்குமிடையே சச்சரவுகள் ஏற்படுவதாகக் கூறப்படுகினறது.

இந்த நோய்த் தாக்கம் பற்றி அறிவித்தும்கூட விவசாய அதிகாரிகள போதிய கவனம் செலுத்தவில்லை எனவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நோய் மிளகாய்ச் செடிகளுக்கும் பரவ ஆரம்பித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. (101)

## கைவிஷேட கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு அன்றையதினம் கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு விசேட கைவிஷேடம் வழங்கும் வைபவமொன்று இடம்பெறவுள்ளதாக வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

புதுவருடப்பிறப்பன்று காலை 7 மணிமுதல் 8.30 மணிவரை இந்தக் கைவிஷேடக் கொடுப்பனவு நிகழ்வு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## நிதியுதவிக்கு பாராட்டு

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் இரண்டு மாடிக்கட்டடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதற்காகப் பழைய கட்டடத்தை இடிப்பதற்கு ஏற்பட்ட செலவாகிய 44 ஆயிரம் ரூபாவினை அரியாலையைச் சேர்ந்த சமாதான நீதிவான் எஸ்.தேவராஜா - மனமுவந்து வழங்கியதற்காகப் பாடசாலைச் சமூகம் அவருக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது. (55)

## பிரெஞ்சுத் திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் 'கில்லோ பொன்ரிகோர்வா' வின் நெறியாள்கையில் உருவான 'பற்றில் ஒவ் அல்ஜியர்ஸ் **(Battlo of Algiers)** எனும் புகழ்பெற்ற பிரெஞ்சுத் திரைப்படம் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே.கனகரத்தினா ஆகியோர் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற வுள்ளது. இந்த நிகழ்வில் பங்கு கொண்டு பயன்பெற விரும்பும் ஆர்வமுள்ளவர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## நிர்வாகிகள் தெரிவு

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இந்தப் புதிய தெரிவில் தலைவராக அ.தற்பரானந்தன, செயலாளராக க.சு.பசுபதி, பொருளாராக மனோண்மணி சண்முகதாஸ், பணிப்பாளராக கே.எஸ்.துரைரட்ணமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாக பணிப்பாளர்சபை உறுப்பினர்களாக 18 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மன்னாரில் விசேட உதவி

(மன்னார்)

மன்னார் சூஆ **(Zoa)** நிறுவனத்தினரால் கடந்தகாலப் போர் காரணமாக உள, உடலியல்ரீதியாகப் பாதிக்கப்பட்ட 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை உடைய குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தெரிந்தெடுக்கப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைகள் முதல் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த் திட்டமானது அண்மைக் காலத்திலேயே 'சூஆ' நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்து.

இதனால் பல ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் பயனடைந்து வருவதாகவும் தெரியவருகிறது. (201)

### யுனிசெவ் ஆதரவுடனான

# ஊனமுற்றோர் புனர்வாழ்வு செயற்பாடு நிறுத்தப்பட்டது

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடனான நிதியிடலின் மூலம், கடந்த இரண்டரை வருடங்களாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் செயற்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யுனிசெவ் நிறுவனம் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இதற்கான நிதி வழங்குவதை நிறுத்தியுள்ளது.

இதில் ஆரம்பத்தில் 12 பேர் கடமையாற்றியபோதும், இறுதியில் நான்கு பேர் மட்டுமே கடமையாற்றினர்.

இந்தத் திட்டத்தின்மூலம் விசேடமாக வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்டோர் பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (111)



# விளையாட்டு அரங்கம்



சச்சின் கங்கூலி
“இதயம் நெருங்கவில்லை”

இந்திய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையில் முல்டானில் இடம் பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில், தேநீர் இடைவேளைக்குப் பிறகு சச்சின் டெண்டுல்கர் - தனது நான்காவது டெஸ்ட் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஆறு ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்ட நிலையில், அணித்தலைவர் ராகுல் ராவிட் - டிக்ளேர் செய்தது - கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத் தியுள்ளது.

கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மட்டு மல்ல, சர்வதேச கிரிக்கெட் வீரர்களதும் அதிருப்திக்குக் காரணமான இந்தச் செயற் பாடு குறித்துப் பின்னர் கருத்துத் தெரி வித்த அன்றைய போட்டியின் அணித் தலைவர் ராகுல் ராவிட் - இந்தச் சர்ச் சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்ட தாகவும், இதனால் அணிக்குள் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்றும், இந்த முடிவால் எவரும் வருத்தப்பட தான் பெரிதுபடுத்தவில்லை எனக்கூறிச் சச்சின் ஒதுங்கிக்கொண்டாலும், ரசிகர்கள் இதைச் சுலபமாக விட்டுவிடத் தயாரில்லை. சச்சினின் சொந்த ஊரான மும்பை உட்பட பல இடங் களிலும் சச்சினின் ரசிகர்கள் கொதித்தெழுந் தனர்.

அணியின் நலன்கருதி எடுக்கப்பட்ட முடி வென்றால், என்ன நலன்கருதி எடுக்கப்பட்டது. அணி மிகவும் பலமானநிலையிலே இருந்துள் ளது. அத்துடன், கையிருப்பில் ஐந்து விக்கெட் டுக்களும் இருந்துள்ளன. இந்தநிலையில் என்ன நலன் என்கின்ற கேள்விக்கு அணி சார்பாக எவரும் பதிலளிப்பதாக இல்லை. அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து இழக் கப்பட்டுக் கொண்டிருந்தால், அணி ‘ஓல் அவுட்’ ஆவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவு என்று கூறலாம். ஆனால் இந்தநிலை காணப் படவில்லை. சச்சினுக்கு இன்னும் தேவையான ஆறு ஓட்டங்களைப் பெறுவதற்கு இரண்டு ஓவர்கள் போதும். எனவே, இரண்டு ஓவர்கள் பொறுத்திருந்து டிக்ளேர் செய்திருந்தால், அணியின் நலனென்ன தலைகீழா கவா மாறிவிடும்.

# துரோகங்கள் என்ன புதிதா

வில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் உடனே வெளியிட்ட கருந்து அதிருப்தி யானது, இரட்டைச் சதத்தை தவறவிட்ட அவரது மனவேதனையைத் தெளிவுபடுத் தியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சச்சின் - இந்த டிக்ளேர் முடிவு, நான் எதிர்பாராதது. தேநீர் இடைவேளையின் போதுகூட, என்னிடம் இது பற்றிக்கூற வில்லை. கடைசி சில ஓவர்களுக்கு முன் னர் டிக்ளேர் செய்யலாம் என்றுதான் சொன்னார்கள். டிக்ளேர் முடிவை கொஞ் சம்கூட நான் எதிர்பார்க்கவில்லையெனத் தனது அதிருப்தியைப் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

அணியின் நலன்களுக்காக இதைத்

அடுத்து இந்திய அணியின் தலைவர் கங்கூலி கூறியுள்ள கருத்து மிகவும் நகைப் பிற்கிடமாகவுள்ளது. அதாவது, ராவிட்டின் இந்தமுடிவு தவறானது என்று கங்கூலி கூறி யுள்ளார். அணித்தலைவர் அரங்கில் இருக் கின்றவேளையிலே, அதுவும் பதில் அணித் தலைவராகப் பணியாற்றுபவர் - அணித் தலைவர் மற்றும் அணிநிர்வாகிகளுடன் கலந் தாலோசிக்காமலா முடிவு எடுப்பார்? கங்கூலி- தான் தப்பித்துக்கொள்வதற்காக ராவிட்டில் பழியைப் போட்டுவிட்டார். ஆனால் அதேநேரம் சச்சினைப் பழி தீர்த்தும்கொண்டார்.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் கங்கூலிபோல் அல்லாது, ராவிட் ஒரு நாண யமான வீரர். இப்படியான வீரர் - ஏனைய வர்களுடன் கலந்தாலோசிக்காது முடிவெடுத் தார் என்றால், அது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும்.

இந்த அவசர முடிவிற்கு ராவிட்டுக்குப் பின்னால், கங்கூலி தான் இருந்துள்ளார் என ரசிகர்கள் தெரிவிக்கின்றனர். ஓய்வு அறை யிலிருந்த செளரவ் கங்கூலி - ராவிட்டுக்கு கண்களாலே உத்தரவுகளை வழங்கிக்கொண் டிருந்ததாகவும், கங்கூலியின் வற்புறுத்தல் தாங்கமுடியாத ராவிட், டிக்ளேர் முடிவை எடுத் ததாகவும் ரசிகர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

சச்சின்மீது கங்கூலிக்குக் கசப்புணர்வு இருந்துவருவது யாவரும் அறிந்ததொன்றே. சேவாக்குடன், தான் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக இறங்கி, சச்சினின் துடுப்பாட்ட வரி சையைப் பின்தள்ளியது இதற்குத் தகுந்த உதாரணமாகும்.

மேலும் கடந்த உலகக் கிண்ணக்கோப் பைப் போட்டியொன்றின்போது, சச்சின் சததை நெருங்கியவேளையில், அடிக்கடி சச்சினுக்கு அடித்தாடும்படி கூறியதால், சச்சின் சததை இழந்தமையையும் இங்கு குறிப்பிடலாம். எனவே, இந்த அவசர டிக்ளேர் முடிவுக்குப் பின்னாலிருந்து தன்னில் பழிவராது செயற் பட்டு, தப்பித்துவிட்டார் கங்கூலி.


என்னதான் இருப்பினும் அனைவரும் ஒரு விடயத்தை மறந்துவிட்டார்கள். சச் சினின் சாதனைகள் தனிநபர் சாதனை யல்ல. அது இந்தியாவின் ஒட்டுமொத்த சாதனை. இந்திய அணி உலக அரங்கில் பேசப்படுவதற்குச் சச்சின் என்கின்ற தனி மனிதனின் பங்களிப்பு மிக அதிகம். இந் திய அணியில் பல திறமையான வீரர்கள் இருந்தாலும், இந்திய அணியின் பிரதி நிதியாக வர்ணிக்கப்படுபவர் சச்சினே என் பதை எவரும் மறுக்கமுடியாது.

- லெஸ்லி -

# தென்னாசிய (SAF)ப் போட்டிகள் பதக்க விபரம்

**SAF** போட்டிகள் பாகிஸ்தானில் முடிவடைந்தன. **SAF** கொடி கொழும்பு மேயரிடம் கையளிக்கப்பட்டு, 2005 ஆம் ஆண்டு பத்தாவது போட்டிகள் தென்னாசியப்போட்டிகள் என்ற பெயரில் இலங்கையில் நடைபெறுவது உறுதியாகிவிட்டது. பாகிஸ்தான் பிரதமர் தடகளப்போட்டிகளை முடித்துவைக்கும்போது, “பிரிவோம் சந்திப்போம்” என்றார் உணர்வுபூர்வமாக.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 101 | 59 | 31 | 191 |
| பாகிஸ்தான் | 42 | 55 | 50 | 147 |
| இலங்கை | 15 | 33 | 57 | 105 |
| நோபாளம் | 7 | 6 | 19 | 32 |
| வங்காளதேசம் | 3 | 11 | 26 | 40 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 3 | 28 | 32 |
| பூட்டான் | 1 | 3 | 2 | 6 |
| மாலைதீவுகள் | 0 | 0 | 0 | 0 |





ஆரம்ப நிகழ்வு

# பிரிவோம் சந்திப்போம்



ஜானி சத்துரங்கனி





நிறைவு நிகழ்வு




சுசந்திகா

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# நன்றும் தீதும் பிறர்தர வாரா

அவுஸ்ரேலியாவிற்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி. ஆனால், மூன்றுமே இலங்கை அணிக்குத் தோல்வி இல்லாமல் முடிந்திருக்கவேண்டுமென்ற நியதியே இருந்தது. அதனை நிர்மூலமாக்கிக் கொண்டவர்கள் இலங்கை அணியினரே.

ஒரு விமர்சகர் கூறுகிறார் - 'முதலாவது டெஸ்ட் சமன் செய்யப்பட்டிருக்கவேண்டும். இரண்டாவது டெஸ்ட் வரலாற்றுப் பதிவுக்குரிய வெற்றியாக அமைந்திருக்கவேண்டும். மூன்றாவது டெஸ்ட் போட்டியை டெஸ்ட் ஆட்டம் என்ற கௌரவம் கொடுத்து ஆடியிருந்தால், சமன் செய்திருக்கலாம்''



- முரளி - "தனிமரம் தோப்பல்ல"

அப்படியானால், மூன்று தோல்விகளுக்கும் இலங்கை விட்ட தவறுகள் என்னவென்று வினாவும்போது, டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கும் முன்னமே தோல்வி என்பது நிச்சயிக்கப்பட்டுவிட்டது என்கிறார். அதாவது அவுஸ்ரேலியா, இலங்கை வந்ததும் விளையாடிய **Warm up Game** க்கு அவுஸ்ரேலியாவிற்குச் சமதையானதொரு அணியைத் தெரிந்திருக்கவேண்டும். அப்படியல்லாமல் பலம் குறைந்ததொரு அணியைத் தெரிந்தமை அவுஸ்ரேலியாவிற்கு உளவியல் பலத்தைக் கொடுத்தது. இலங்கைத் தொடர் இலகுவானதாக இருக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்துவிட்டது.

இரண்டாவது காரணம் - முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் தொடர்பு கொண்டது. காலி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்திற்குச் சுழல் பந்துவீச்சாளருக்குச் சாதகமான அமையும் வித்தில் மைதானம் அமைக்கப்பட்டது. அதுவும் முரளியை மனதில் கொண்டே அமைக்கப்பட்டது. ஆனால், மறுபுறத்தில் ஷேன்வோண் இருந்ததை இவர்கள் மறந்துவிட்டார்கள். ஷேன்வோண் பந்து வீச்சில் இலக்குகளைச் சரித்துவிட்டார். ஆட்டம் பறிபோயிற்று.

மூன்றாவது, நீண்ட இனிங்ஸ் விளையாடும் ஆற்றலை இலங்கை வீரர்கள் இழந்துவிட்டார்கள். அதுவும் இலக்குப் பெரிதாக அமையும்போது, கூடுதலாகப் பதகளிப்பு அடைந்து விடுகிறார்கள். ஒருநாள் ஆட்டத்தின் பக்குவத்தில் ஆடி, கோட்டைவிட்டு விடுகிறார்கள். இதற்கு உதாரணமாக இரண்டாவது டெஸ்டில், முழுநாளும் இருக்கத்தக்கதாக 51 ஓட்டங்கள் எடுக்கமுடியாமல் மண் கௌவியதை எடுத்துக்காட்டுகிறார்கள். மூன்றாவது டெஸ்டில், அணியின் கூட்டுப் பொறுப்பு, ஒத்தியங்கும் தன்மை சரியாக எடுபடாததால் மூன்றாவது ஆட்டமும் கைநழுவிப் போயிற்று.

எனவே, இலங்கைக் கிரிக்கெட் அணி பல்வேறு விடயங்களில் தன்னை மீள் பரிசோதனை செய்து கொள்ளவேண்டிய அவசியம் தெளிவாகத் தெரிகின்றது. பொறுமையாக ஒரு இனிங்ஸை எப்படி வளர்த்தெடுப்பது என்பதற்கு, இன்ஸமாம் உல் ஹக்கின் ஆட்டத்தையும், பின் வரிசையில் நிறைய ஓட்டங்களைச் சேர்ப்பது எவ்வாறு என்பதை இந்திய - பாகிஸ்தானிய பின்வரிசை வீரர்களின் ஆட்டத்தைப் பார்த்தும் இலங்கை அணி நிறையப் பாடம் கற்றுக்கொள்ளலாம் போல இருக்கிறது.

ஏனெனில், தற்போது நடந்து கொண்டிருக்கும் இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் தொடர், டெஸ்ட் ஆட்டங்களுக்கு இலக்கணம் வகுப்பது போலவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- மக்டலின் -

# நியூசிலாந்தின் சாதனை தலைவனின் வழிகாட்டல்



ஸ்ரீபன் பிளெமிங் "அதிதீரன்"

நியூசிலாந்து அணி - ஒருநாள் போட்டித் தொடரை 5:1 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டிருந்த நிலையில் ஆரம்பமானது தென்னாபிரிக்காவுக்கும், நியூசிலாந்துக்கும் இடையிலான டெஸ்ட்போட்டித் தொடர்.

இந்தப் போட்டித் தொடரில் பல தனி மனித சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருந்தன. ஒருநாள் போட்டித் தொடரில் இருந்த அதேயளவு எதிர்பார்ப்பு டெஸ்ட் போட்டிகளிலும் தெரிந்தது. இரண்டு அணிகளும் ஒன்றையொன்று சளைத்தவையல்ல என்பதை நிரூபித்தன.

தென்னாபிரிக்க அணியின் கலிஸ் சதம் ஒன்றைப் பெறத் தவறியதன்மூலம் டொனால்ட் பிரட்மனின் சாதனை ஒன்றை முறியடிக்கத் தவறிவிட்டார். தான் விளையாடிய போட்டிகளில் அவர் தொடர்ச்சியாகச் சதம் பெற்றுவந்தார். ஒரு போட்டியில் சதம் பெறமுடியாததால் அவர் சாதனையை முறியடிக்காமல் போயுள்ளது. எனினும், டொனால்ட் பிரட்மனுக்கு இணையாக கூறக்கூடிய ஒருவர் என்ற பெயரை கலிஸ் பெற்றுள்ளார்.

நியூசிலாந்து அணியின் கெய்ன்ஸ் 200 விக்கெட்டுக்களைத் தனது டெஸ்ட் போட்டி வரலாற்றில் பெற்று ஒரு இலக்கை அடைந்துள்ளார். அதேவேளை, டெஸ்ட் போட்டி ஒன்றில் 3000 ஓட்டங்களைப் பெற்ற வீரர்கள் வரிசையிலும் இணைந்துள்ளார். கெய்ன்ஸ் ஒரு சகலதுறை வீரர் என்பதை உணர்த்தியுள்ளார். துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் ஒரு மைல் கல்லை அடைந்துள்ளார்.

நியூசிலாந்து அணி தோல்வியைத் தழுவிவிடும் என்ற ஒரு நிலையில், அந்த அணியின் தோல்வியைத் தடுத்து, தென்னாபிரிக்க அணியின் வெற்றியைத் தடுத்து நிறுத்தி, போட்டியைச் சமநிலைபெறச் செய்தார் ஓரம். இந்த நிகழ்ச்சி நியூசிலாந்துக்கும், தென்னாபிரிக்காவுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இடம் பெற்றது.

கிறிஸ் மாட்டின் - பந்துவீச்சில் இந்தத் தொடரில் தொடர்ச்சியாக ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தி, சாதனை ஒன்றையும் பெற்றுள்ளார். உண்மையில் முதலாவது டெஸ்ட் போட்டியைத் தென்னாபிரிக்க அணியே வெல்லும் என்று கிரிக்கெட் ரசிகர்கள் நம்பியிருந்தனர். அந்தளவிற்கு தென்னாபிரிக்க அணியினர் உணர்ந்து விளையாடினர். ஒருநாள் போட்டித் தொடரில் விட்ட தவறுகளையெல்லாம் நன்றாக ஆராய்ந்து விளையாடினார்கள்.

அதேயளவு பொறுமையும், நிதானமும் கொண்டு நியூசிலாந்து அணி வீரர்களும் செயற்பட்டார்கள். ஓரம் - தான் ஒரு பந்து வீச்சாளர் என்ற நிலையினைக் கடந்து, ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை இந்தப் போட்டியின் மூலமும் எடுத்துக் காட்டி நியூசிலாந்து அணியின் தோல்வியைத் தடுத்துப் போட்டியை சமநிலைப்படுத்தினார்.

இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. ஸ்ரைஸ் 170, கெய்ன்ஸ் 158 ஓட்டங்களையும், ஓரம் 90 மைக்மில்லன் 82 ஓட்டங்களையும் பெற்று நல்லதொரு அடித்தளம் இட்டனர்.

தென்னாபிரிக்க 296 ஓட்டங்களை முதல் இனிங்சிலும், 349 ஓட்டங்களை இரண்டாவது இனிங்சிலும் பெற்றுக்கொண்டது. நியூசிலாந்து பெற்ற 595 ஓட்ட எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், 51 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்றநிலையில் ஒரு விக்கெட்டை இழந்து, வெற்றி இலக்கை அடைந்தது நியூசிலாந்து. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறுவதன்மூலம் டெஸ்ட் தொடரை வெல்லலாம் என்றநிலை நியூசிலாந்துக்கு - டெஸ்ட் தொடரை சமப்படுத்தலாம் என்றநிலை தென்னாபிரிக்காவுக்கு.

மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரைச் சமப்படுத்தி, தமது நிலையைத் தக்கவைத்துக்கொண்டது தென்னாபிரிக்க அணி. மூன்றாவது டெஸ்ட் போட்டியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டதன்மூலம் போட்டித் தொடரைச் சமப்படுத்தியது. நியூசிலாந்து 308 மற்றும் 282 ஓட்டங்களையும், தென்னாபிரிக்கா 316 மற்றும் 244/4 என்ற ஓட்டங்களையும் இந்தப் போட்டியில் பெற்றுள்ளன.

- வெண்மதி -

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. தென்னாசிய (2004) விளையாட்டுப்போட்டிகளில், அதிகூடிய பதக்கங்கள் பெற்ற நாடு எது?
02. சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் யார்?
03. இந்திய - பாகிஸ்தான் இரண்டாவது டெஸ்டில் வெற்றிபெற்ற நாடு எது?

விளையாட்டுப் புதிர் - 06

விண்ணப்பப்படிவம்.

முழுப்பெயர்:- ..............................................

முகவரி:- ..............................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 16.04.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 06,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 05 இன் விடைகள்

1) ரீ.மதன்ராஜ் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)
2) டரன் லீமன் - மாவன் அத்தபத்து.
3) இன்சமாம் உல் ஹக்

பரிசு பெற்றவர்
ஜெ.ஜனனி
கனகசபை வீதி,
மானிப்பாய்.

YMP

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

# ஒற்றுமை இன்றேல் தாழ்வு!!!



"புன்னகை வேஷங்கள்"

ஒரு காலத்தின் கிரிக்கெட் ஜாம்பவான்கள் என்றழைக்கப்பட்டவர்கள் மேற்கு இந்தியக் கிரிக்கெட் அணியினர். தற்பொழுது இங்கிலாந்து அணி மேற்கு இந்திய மண்ணில் வைத்தே, மேற்கு இந்திய அணியை அவலத்துக்குள் தள்ளியநிலையில், உணர்வலைகள் பலவாறு வெளிப்படுகின்றன. விமர்சகர்கள் மேற்கு இந்திய கிரிக்கெட் பற்றி எழுதும்போதே - மரணமடைந்துவிட்ட மேற்கு இந்திய கிரிக்கெட்... என்றே ஆரம்பிக்கிறார்கள்.

கடந்த ஒரு தசாப்தமாக மேற்கு இந்திய அணி குறிப்பிடக்கூடிய அளவிற்கு ஒரு அணியாக இல்லை. இடைக்கிடையே அம்புறோஸ், வோல்ஷ், லாறா என்று சில மினுமினுப்புகள் இருந்தாலும், அணி என்ற வகையில் ஒன்றும் இல்லை. 1995 ஆம் ஆண்டு புதிய சக்தியாக உருவாக ஆரம்பித்திருந்த அவுஸ்ரேலியா - மேற்கு இந்திய அணியை மேற்கு இந்தியத் தீவுகளிலே வைத்து தோற்கடித்தபோது, 22 வருடங்களின் பின் தாயகத்திலே மேற்கு இந்தியத்தீவுகள் தொடரை இழந்தபோது, மேற்கு இந்திய அணி சேடம் இழுக்க ஆரம்பித்துவிட்டது. இந்தக் காலகட்டத்திலிருந்தே தீவுகளுக்கிடையிலான குடும்பி பிடிச்சண்டைகள், பிரதேசவாதம், யார் பெரியவன் என்ற மிதப்பு எல்லாக்கட்டத்திலும் ஏற்படத்தொடங்கிவிட்டது. ஒரு உதாரணமாக - கார்ஸ் ஹூப்பர் மேற்கு இந்திய அணியின் தலைவராக்கப்பட்டபோது, அந்த ஆட்டத்தில் நேர்முக வர்ணனை செய்ய மைக்கேல் ஹோல்டிங் மறுத்தாராம். பங்களாதேஷ், சிம்பாப்வே இரண்டும் டெஸ்ட் உலகின் தரவரிசையில் தொங்கலில்தான் நிறகிறார்கள். ஆனால், மேற்கு இந்திய அணி அப்படியல்ல. கடந்த ஒன்பது வருடங்களாகத் தாயகத்துக்கு வெளியே எந்த வெற்றித் தொடரும் இவர்களுக்கு இல்லை.

கடந்தகால, ஆனால் அண்மையகால வரலாற்றைப் பார்த்தால் - தென்னாபிரிக்காவுடன் 5:0 என்ற தோல்வி தொடர்ந்து, நியூசிலாந்துடன் 2:0, அவுஸ்ரேலியாவுடன் 5:0, அவுஸ்ரேலியாவுடன் 5:0, இலங்கையுடன் 3:0, பாகிஸ்தானுடன் 2:0, என்று தோல்விப் பட்டியல் நீண்டுசெல்கிறது. மேற்கு இந்தியத்தீவுகள் எழுபத்தாறு வருட வரலாற்றில் 120 டெஸ்ட் தோல்விகள் கண்டுள்ளது. அதில் கடந்த ஏழு வருடத்தில் மட்டும் 40 தோல்விகள் இன்னமும்கூட இங்கிலாந்தோடு, சமனாக ஆட மேற்கு இந்திய முயலக்கூடும். ஏனெனில், பிறைன் லாறா என்றொரு நபர் இருக்கிறார். ஏனெனில், அவுஸ்ரேலியாவிற்கு எதிராக இறுதியில் 3 டெஸ்ட் போட்டிகளில் அவர் எடுத்த ஓட்டங்கள் 213, 153, 100.

ஆனால், பந்துவீச்சு பகுதி பலமிழந்து நிற்கின்றது. முன்போன்று திரண்மிக்கதாக இல்லை. அத்தோடு, பிடல் எட்வெட்சின் உபாதைகள் மற்றும் லோசனின் பந்து வீச்சுமுறை பற்றிய சந்தேகங்களும் ஒரு பின்னடைவு. தற்போது டெஸ்ட் தரத்தில் சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகள் மட்டும்தான் மேற்கிந்திய அணிக்குப் பின்னால் நிற்கின்றன. ஒருநாள் தரத்தில் எட்டாவது இடம். இன்றைய வீரர்கள் டெஸ்ட் ஆட்டத்தை விளையாட்டாக எடுத்துவிட்டார்கள். 90 ஓவர்கள். மைதானத்தில் நிற்பதற்கு லாயக்கற்றவர்களாக மாறிவிட்டார்கள். ஒன்றரை மணிநேரம் ஒரு திரைப்படம் பார்த்துவிட்டு, வெளியேவரும் ரசிகர்களுக்குச் சமமானவர்களாக இருக்கிறார்கள். **Three W**s என்றால் ஏதாவது லொட்ஜின் பெயர் என்று கேட்கும் அணியிலேயே இன்றைய வீரர்கள் இருக்கிறார்கள் என்று பொரிந்து தள்ளுகிறார் ஒரு விமர்சகர். (மேற்கு இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மிகப்பெரும் ஜாம்பவான்கன் வீக்ஸ் - வொல்கொட் - வொரல் இந்த மூவரது பெயரின் முதலெழுத்துக்களே **Three W**s) என்னதான் இருந்தாலும், மேற்கு இந்திய அணியின் தரம் மற்றும் அணி வீரர்களின் ஆற்றல், ஆளுமைகளை நன்கறிந்த கிரிக்கெட்டின் பழைய ரசிகர்கள் அதாவது, அறுபதுகளிலிருந்து அறிந்தவர்கள் - இந்தக் கட்டுரையை வாசித்து நிரம்பவே மனம் வருந்துவார்கள்.

-ஜோசப் கிருஷ்ணா-

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports


தெற்குத் திசையிலிருந்து...

இந்திரஜித்

# நாட்டின் முக்கியமான சக்தியாக உருவாக்கம் பெறும் ஜே.வி.பி.

இலங்கையில் மாற்றங்களுடன் எதிர் பார்க்கப்பட்ட பொதுத் தேர்தல் ஒன்று நடந்து முடிந்துள்ளது. எனினும், சர்வதேசமும் பெரும்பான்மையான தமிழரும் எதிர்பார்த்த முடிவை பெரும்பான்மையான சிங்களவர் கள் மாற்றி அமைத்துள்ளனர்.

கடந்த 2 வருடகால போர் ஓய்வின் போது, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை விட தென்னிலங்கை சிங்கள மக்களே முழுமைப் பயன்பெற்றிருந்தனர். இதனை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்



கவும், வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிருந் தார்.

கொழும்பிலும், நாட்டின் இதரபகுதிகளி லும் தாக்குதல்கள் மற்றும் அதனால் ஏற் படும் பயப்பீதி என்பவற்றை மக்கள் கடந்த 2 வருடகாலமாக மறந்திருந்தனர். ஆனால், அவர்கள் பொதுத் தேர்தலின்போது எடுத்த முடிவு - குறுகிய நோக்கத்தைக்கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் பூரண அறிவைக் கொண்டிருக்காத தன்மையை உணர்த்துவதாகவே உள்ளது.

நாட்டில் அமைதியை இறைமைக்குப் பாதிப்பில்லாமல் பெறமுயலும் சிங்கள மக் கள், அதற்கான தீர்வு ஊடகங்களை அடை யாளம் காண்பதில் வரலாற்றுரீதியாக தவறி வருகின்றனர். அவ்வாறான ஒரு தவறையே, நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் அவர் கள் செய்துள்ளனர். இந்தக் கருத்து சிங்க ளப் பெரும்பான்மை மக்கள் ஐக்கிய தேசி யக் கட்சிக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்பதை குறித்து நிற்கவில்லை.

ஆயினும், எந்தக் கட்சிக்கு வாக்களித் தால், புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச் சினைக்குத் தீர்வைக் காணலாம் என்பதில் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை என்ப தையே தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டி யுள்ளன.

சிங்கள மக்கள் சாதாரணமாக நீண்ட காலத் திட்டங்களுக்கு வரவேற்புத் தெரி விப்பதில்லை. அதேநேரம், குறுகிய காலத் திற்குள் அவர்களைப் பாதிக்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டால், அதனை உடனடி யாகவே மறந்து போகும் மனப்பாங்கையே கொண்டுள்ளனர்.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன இந்தியாவுடன் இணைந்து ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் மாகாண சபைத் திட்டத்தைத் முன்வைத்தமையைக் குறிப்பிடலாம். இது இலங்கை நாட்டின் இறைமைக்கோ, தீர்வை நாடி நிற்கும் தமி ழருக்கோ எவ்வித பயனையும் அளித் திருக்கவில்லை. எவரையுமே குறிப்பாக தமது அரசாங்கத்தின் பிரதமராகவிருந்த ரண சிங்கப் பிரேமதாஸாவுக்குக்கூடத் தெரியா மல் ஜெயவர்த்தன இந்தத்திட்டத்தை அமுல்படுத்தினார்.

இந்த நகர்வு சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பு அலையை ஏற்படுத்தியபோதும், ஒரு மாதகாலப் பகுதிக்குள் அது மறைந்து போனது. இந்த உதாரணத்தைச் சுட்டிக்காட்டி யமைக்குக் காரணம் - சிங்கள மக்கள் மத்தியில் ஆட்சியை நீடித்துச்செல்லும் நோக்குடன் அவர்களைத் திருப்திப்படுத்து வதாக எண்ணிக் காலத்தை வீணடிப்பது, அவர்களின் பொறுமையைச் சோதிப்பதாக அமைந்துவிடும் என்பதைக் கூறுவதற் காகும்.

ஐக்கியதேசியக் கட்சி இவ்வாறான அனுபவங்களை ஏற்கனவே கொண்டிருந்த போதும், தமது நகர்வில் தவறுகளை மேற் கொண்டதாகவே கருதப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத்திட்டம் தொடர்பில் தமிழ்மக்கள் பூரணநம்பிக்கை யைக் கொண்டிருந்தனர். இதன்காரண மாகத் தமது ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அமெரிக் காவுடனோ அல்லது இந்தியாவுடனோ பாது காப்பு முனைப்புகளை அவர் ஏற்படுத்திய மையைக்கூட தமிழ் மக்கள் கண்டுகொள்ள வில்லை.

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்க - தமிழீழ விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத் தும் நடவடிக்கை குறித்து சாதாரண சிங் கள மக்கள் அறிந்திருக்கவில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு தம்மைப் பாதிக்கும் வகையில் தீர்வு ஒன்றை ரணில் விக்கிரம சிங்க வழங்கப்போகிறார் என சிங்கள மக் களின் மனங்களில் எண்ணம் ஏற்பட்டது.

இதன் பிரதிபலனையே அவர்கள் தேர்த லின்போது வெளிக்காட்டினர். சமாதான முனைப்புகள் முன்னெடுத்துச் செல்லப்படும் போது, அது குறித்து பூரண தெளிவொன்றை சிங்கள மக்களுக்கு வழங்காமை -ரணில் விக்கிரமசிங்கவினதும் அவரது அரசாங்கத் தினதும் குற்றமாகும். தமது ஆட்சிக் காலத் தில் இதனைச் செய்யாதவர் தேர்தல் காலத்தின்போதே தனது நிலைப்பாட்டை அறிவித்துவந்தார்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்க் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணி யும் 2 வருடகால ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆட்சிக் காலத்தை தமது எதிர்ப்புக ளுக்கான வாய்ப்புக் காலமாக பயன்படுத் திக் கொண்டன.

பொதுத் தேர்தல் பிரசார காலத்தில்

**லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக தெரிவு செய்யவேண்டுமென மக்கள் விடுதலை முன் னணி விரும்பியது. ஆனால், அதற்கு அரசாங் கத்திலிருக்கும் மகிந்தராஜ பக்ஷவின் தலை மையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்முடிவா கவே மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். இந்த நடவடிக்கை அரசாங்கத்தின் மும் முனைப்போட்டியை ஏற்படுத்திவிட்டது.**

அந்த வாய்ப்பை அந்தக் கட்சிகள் இரண் டும் உரியமுறையில் செயற்படுத்தின.

இலங்கையின் அரசியலில் அரசாங்கம் ஒன்றின் ஆயுட்காலம் 6 வருடங்கள் என்ற போதும் கட்சிகளின் உரிய செயலின்மை காரணமாக கடந்த 3 வருடங்களுக்குள் மூன்று பொதுத் தேர்தல்களை நாடு சந்தித் துள்ளது. எனினும், இவற்றின் மூலம் எந்த ஒரு கட்சியும் போதிய பெரும்பான்மையுடன் தனிக்கட்சி ஆட்சியை நிறுவமுடியவில்லை. இதற்கு இலங்கையின் விகிதாசார தேர்தல் முறையும் காரணமாகும்.

தேர்தல் முடிவடைந்து நாட்டில் தற் சமயம் சிறுபான்மை அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் நாளுக்கு நாள் தமது உள்ளக பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்வதிலேயே பெரு மளவு நேரத்தை செலவிட்டுவருகிறது.

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர் பில்கூட உடன்பாட்டை எட்டாத கட்சிக ளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது சவாலின்படி, அரசாங்கம் ஒன்றை எப்படியோ நிறுவிவிட்டன. ஆனால், அந்த அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை இந்த இரண்டு கட்சிகளாலுமே நிர்ணயிக்க முடி யாதுள்ளது.

லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக தெரிவு செய்யவேண்டுமென மக்கள் விடு தலை முன்னணி விரும்பியது. ஆனால், அதற்கு அரசாங்கத்திலிருக்கும் மகிந்தராஜ பக்ஷவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்தரக் கட்சியினர் எதிர்ப்பை வெளியிட் டனர். இதன்முடிவாகவே மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் புதிய பிரதமராக தெரிவு செய் யப்பட்டார். இந்த நடவடிக்கை அரசாங்கத் தின் மும்முனைப்போட்டியை ஏற்படுத்தி விட்டது.

மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்த வரையில், ஜே.வி.பி. என்ற தமது நாமத்தின் பின்னால், இனவாதம் இருப்பதாக தமிழ் மக்களும், சர்வதேசமும் கொண்டிருக்கும்



எண்ணப்பாட்டை நிவர்த்திசெய்யவேண்டிய அவசியம் அதற்கிருந்தது. எனவேதான், பிறப்பால் தமிழரான லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்கவேண்டும் என அது முனைப்பெ டுத்தது. ஆனால், இதனை சுதந்திரக் கட்சி யினர் ஏற்றுக்கொள்ளவில்லை. மகிந்த ராஜ பக்ஷ- ஜாதிக ஹெல உறுமயவின் அனு சரணையுடன் எதிர்ப்புத் தெரிவித்து இலங் கையின் புதிய பிரதமராக தெரிவாகும் வாய்ப்பை பெற்றுக்கொண்டார்.

இந்த விடயங்களால் ஜனாதிபதி கொண்டிருந்த மற்றுமொரு பாரிய தன்னல அரசியல் நகர்வொன்றும் அடிபட்டுப்போனமை அவருக்கு மனரீதியாகப் பாதிப்பையே கொடுத்துள்ளது. 2001 ஆம் ஆண்டு ஜனாதி பதியாக தெரிவான சந்திரிகா - 2005 ஆம் ஆண்டின் இறுதிக்காலப் பகுதியில் தனது பகுதியிலிருந்து விலகவேண்டும். அதற்கப் பால் அவரால் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக தெரிவாக வாய்ப்பில்லை.

எனவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றியமைத்து, 'வெஸ்ட் மினிஸ்ரர்' முறையில் மீண்டும் பிரதம மந்திரியாக நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்கும் நோக்கம் - சந்திரிகா பண் டாரநாயக்கவிற்குவிருந்தது. இதற்காகவே ஜே.வி.பி - கதிர்காமரை பிரதமராக முன் மொழிந்தபோது, அதனை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டார்.

தமக்கு விசுவாசமான ஒருவர் அந்தப் பதவியிலிருந்தால், தேவையான வேளை யில் அவரிடமிருந்து பிரதமர் பதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நோக்கமே ஜனாதிபதியிடம் இருந்தது. ஆனால், மகிந்தராஜபக்ஷவின் தெரிவானது - அவ ரின் நீண்டகால அரசியல் வாழ்விற்கு முடி வைக் கொண்டுவந்துவிட்டது. மறுபுறத்தில் பண்டாரநாயக்க அரசியல் பரம்பரையில், எஞ்சியுள்ள அநுராபண்டாரநாயக்கவுக்கும் இந்த அரசாங்கத்தில் மஹிந்த ராஜபக் ஷவின் நகர்வால் பாரிய இடர் ஏற்பட்டுள்ளது.

அவரின் சொந்தத் தொகுதியான கம் பஹாவில் விருப்புத்தெரிவு வாக்கில் அநுரா பண்டாரநாயக்கவை - மக்கள் விடுதலை முன்னணியில் விஜித ஹேரத் இரண்டாவது இடத்திற்குப் பின்தள்ளியமையும் அநுரா வைப் பொறுத்தவரையிலும், பண்டாரநாயக் கவின் அரசியல் பரம்பரையிலும் பாதிப் புக்களின் முதற்படிகளாகக் கருதப்படுகின் றன.

தற்போதைய நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமது பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும். எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி -பலமிழந்துள்ள நிலையில், பெரும்பான் மையை நிரூபிக்காவிட்டாலும்கூட, இலங் கையின் அரசியல் அமைப்பின்படி அந்த ஆட்சிக்கு உடனடிப்பாதிப்பு ஏற்படப்போவ தில்லை.

எனினும், நிதி தொடர்பான சட்டங்களை இயற்றும்போது நாடாளுமன்றத்தில் 113 ஆசனப்பெரும்பான்மையை அந்த அரசாங் கம் காட்டாதுவிட்டால் அதனால், தொடர்ந்து இயங்கக்கூடிய வாய்ப்பு அற்றுப்போகும். அதேநேரம், தென்னிலங்கையின் மூன்றா வது சக்தியாக நாடாளுமன்றத்தில் உரு வெடுத்திருக்கும். ஹெல உறுமய பௌத்த



பிக்குகள் - தமிழீழ விடுதலைப் புலிகளு டன் மாத்திரம் அரசாங்கம் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தும்முனைப்பை தற்போதே எதிர்த்துள்ளனர். அவ்வாறான அரசாங்கம் ஒன்றிற்கு தாம் ஆதரவளிக்கப்போவ தில்லை எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது ஜனாதிபதியால் நினைத்த நேரத் தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் - சிறு பான்மை அரசாங்கமொன்றை வைத்துக் கொண்டு, பேச்சுவார்த்தை நடத்தமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நான்கு மாத காலப்பகுதிக்குள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியை கவிழ்க்கும் நடவடிக்கைகளை முனைப்புப் படுத்தவுள்ளது. இதன் ஒரு கட்டமாக மக் கள் விடுதலை முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணைந்திருப்பதை விரும் பாத ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் வசப்படுத்துவதில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு சென்று கொண் டிருக்கும்வேளையில், 20 வருடங்களுக்குப் பின்னர் தமது வாக்குகளைச் செலுத்திய இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமக்க ளின் சமாதான ஆதங்கம் - காலதாமத மாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரம், தென்னிலங்கையிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமிருந்து குறுகிய இலாபம் கருதி அதற்கு வாக்களித்த சிங் கள மக்களை திருப்திப்படுத்த முடியாத நிலை தோன்றுமென்றே எதிர்பாக்கப் படுகிறது. என்றாலும், ஜே.வி.பி. நாட்டின் இரண்டாவது அரசியல் சக்தியாக இந்தத் தேர்தலின் மூலம் தெரிவானமை அதற்குப் பாரிய வெற்றியாகவே கருதப்படுகிறது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்

திருக்குறள்

# நமது நோக்கு

## கருணா குழு மீதான நடவடிக்கை தவிர்க்க முடியாத அவசியமே

கிழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து, இயக்கக் கட்டுப்பாடுகளை மீறி, தன்னிச்சையாகவும், முறைகேடாகவும் செயற்பட்ட காரணத்தால், முற்றாக நீக்கப்பட்ட கருணாவும் அவரது குழுவைச்சேர்ந்தவர்களும் - கடந்த சில வாரங்களாகப் பிரதேசவாத உணர்வை ஊட்டுவதன் மூலம் தமிழினத்தின் ஐக்கியத்தையும் தமிழ்த்தேசியத்தின் வலுவையும் சிதைக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி, தமிழ் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வந்தமை தெரிந்த விடயமே.

பௌத்த - சிங்கள பேரினவாத சிந்தனை கொண்ட இலங்கையின் ஆட்சியாளர்களால் அடக்கியொடுக்கப்பட்டு, இராணுவ ரீதியிலான அரச பயங்கரவாதத்திற்கு ஆளாகி அல்லல்பட்டு அழிவுற்று, தமது இருப்புக்களை இழந்து, துயரம் சுமந்தவர்களாகி அலைந்த தமிழ் மக்களது அரசியல் மற்றும் வாழ்வுரிமைகளை வென்றெடுப்பதற்கான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அளவற்ற தியாகங்களைப்புரிந்த விடுதலைப்புலிகளையும் அவர்கள் பின்னால் அணிதிரண்டு இயங்கிய தமிழ்மக்களையும் அவர்களின் இலட்சியங்களையும் கொச்சைப்படுத்தி - அவமானப்படுத்தும் திட்டத்துடன் இயங்கிய கருணா குழுவினரது நகர்வுகள் யாவும் ஆபத்தானதாக அத்துமீறிப்போனதையடுத்து அவர்களைக் கட்டுப்படுத்தி ஒடுக்கப்படவேண்டிய வரலாற்று அவசியம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது தவிர்க்கமுடியாத ஒன்றேயாகும்.

ஒரு விடுதலைப் போராளியாக - ஒரு தளபதியாக மக்களையும் இயக்கத் தலைமையையும், தன்னை நம்ப வைத்து ஏமாற்றிக் கொண்டே, தன் சுயநல அபிலாஷைகளை நிறைவேற்ற தன்னால் முடிந்த அனைத்தையும் மிகச்சாதுரியமாகவும் நுணுக்கமான திட்டமிடலுடனும் சாத்தியமான அனைத்து வகையிலும் செய்து வந்த கருணா தனது உள் நோக்கங்களும் சதித்திட்டங்களும் வெளியாகும் நிலை ஏற்பட்டதும், தன்னைக் கிழக்குப்பகுதி மக்களின் நலனில் மட்டும் அக்கறை கொண்ட ஒரு பிரதேச உணர்வு மிக்க தனித் தலைவனாக இனங்காட்டி கிழக்குப் பகுதி மக்களிடையே ஒரு மனக் கிளர்ச்சியை உண்டு பண்ண முயன்றதன் மூலம் தமிழ் மக்களிடையேயான ஒற்றுமையுணர்வைச் சிதைக்க முயன்றார் என்பது வெளிப்படையான விடயமாகும்.

கருணாவின் இந்தத் துரோகத்தனமான செயற்பாடுகளுக்கு பின்னால் சில உள்ளக - வெளியக - அயலக சக்திகளின் தூண்டுதலும் ஆதரவும் பக்கபலமாக இருந்ததும் தெரிந்த ஒன்றேயாகும்.

தேர்தல் காலத்திலும் அதன்பின்னரும் கருணாவும் அவரது குழுவினரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் அரசியல் அநாகரிகத்தின் உச்சக்கட்டமாகக் கூறமுடியும்.

கிழக்கில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வன்முறைச் செயற்பாடுகளை கட்டவிழ்த்துவிட்டு அதற்கான பழியை விடுதலைப்புலிகள் மீது சுமத்திய தொலைநோக்கு சிந்தனையற்ற அயோக்கியத்தனத்தை புரிந்த கருணா, தம் கும்பலை ஏவிவிட்டு மட்டக்களப்பு வாழ் யாழ்.குடாத்தமிழரை 24 மணி நேரத்தில் வெளியேறுமாறு கட்டளையிட்டு அவல நிலைக்குள்ளாக்கினர்.

தேர்தலில் போட்டியிட்ட தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி என்பவரைக் கொன்று அந்தப் பழியை விடுதலைப்புலிகள் மீது போட்டுவிட்டு அவருக்கு மாமனிதர் என்ற விருதை அதிகப்பிரசங்கித்தனத்துடன் வழங்கி அவரின் உடலைத் தியாகத்தாய் அன்னை பூபதி சமாதியருகே புதைத்து ஒரு மாபெரும் தியாகத்தை கொச்சைப்படுத்தும் முட்டாள் தனத்தைச் செய்தார்.

இவையும், இவைபோன்ற ஏனைய பல நடவடிக்கைகளும் தமிழுணர்வுள்ள மக்கள் அனைவரதும் மனங்களைப் புண்படுத்தியும், கிழக்கு மாகாண தமிழ்மக்களின் எதிர்காலத்திற்கே அச்சமூட்டுவதாகவும் அமைந்தது.

இராணுவத்துடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்தது.

ஜனாதிபதியுடன் பேசமுயன்றது, இராணுவத் தளபாதியால் பாராட்டப்பட்டது.

பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக இயங்க அனுமதி கோரி அரசிடம் கேட்டது.


கொழும்பில் கூட்டமைப்பு உறுப்பினர்களின் கூட்டத்தில் இருந்து கிழக்குமாகாண உறுப்பினர்களை இராணுவ அனுசரணையுடன் கடத்தியது. அவர்களைப் புதிய அரசுக்கு ஆதரவு அளிக்குமாறு நிர்ப்பந்தித்தது என - எத்தனையோ தமிழின விரோத செயற்பாடுகளை, கருணாவும் அவரது குழுவைச் சேர்ந்தவர்களும் மேற்கொண்டமையானது துரோகத்தனத்தின் உச்சமாகும்.

இதனை இப்படியே தொடரவிடுவது தமிழினத்தின் எதிர்காலத்திற்கு எத்தகைய ஆபத்தானது என்பதை தமிழ் மக்கள் அனைவரும் நெடுமூச்சுடன் கடந்த சில நாட்களாகவே யோசித்து வந்துள்ளார்கள் என்பது பகிரங்கமான விடயமே.

இந்த நிலையில் தான் கருணா குழுவின் கெடுபிடிகளுக்குள், அடக்குமுறைக்குள் இருந்து கிழக்குப் பகுதி மக்களை விடுவிக்க வேண்டிய நடவடிக்கையை விடுதலைப் புலிகள் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆரம்பநாள் நடவடிக்கையே கருணாவின் பலம் குறித்த பலவீனத்தையும் அவருக்கு ஆதரவாக இருப்பது அரசபடைகள் என்பதையும் அவரால் தன்னுடன் உள்ள போராளிகளைப் பாதுகாக்க முடியாதென்பதையும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இதனை அவருக்கு ஆதரவளிக்க முன்வருவோர் புரிந்து கொள்வது அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




# 13 ஆவது நாடாளுமன்றத்திற்கு பதினொரு பெண் உறுப்பினர்கள்

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத்தேர்தலின்மூலம் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்துக்கு 11 பெண் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஐந்து பெண் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலும், நால்வர் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பிலும், இருவர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பிலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

மொனறாகல மாவட்டத்திலிருந்து அமேதா ஜெயசேன, இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து பவித்திரா வன்னியாராச்சி, கம்பஹா மாவட்டத்திலிருந்து அஞ்ஞான் உம்மா, மாத்தளை மாவட்டத்திலிருந்து சுஜாதா அழகக்கோன், திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து பேரியல் அஷ்ரப் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

ஐ.தே.கவின் முன்னாள் செயலாளரான மஹிந்த காமினி அத்துக்கோரளவின் சகோதரியான, தலதா அத்துக்கோரள இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

குருநாகல் மாவட்டத்திலிருந்து முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் அமர பியசிறி இரத்னாயக்கவும், முன்னாள் அமைச்சரான காலஞ்சென்ற சந்திரா பண்டாரவின் மகள் சந்திராணி பண்டார மீண்டும் அநுராதபுரத்திலிருந்தும், முன்னாள் மீன்பிடி அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவின் மனைவியான மேரி லஹீன் பெரேரா புத்தளத்திலிருந்து இரண்டாவது தடவையாகவும் ஐ.தே.க. சார்பில் தெரிவாகியுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து தங்கேஸ்வரி, யாழ்ப்பாணத்திலிருந்து பத்மினி சிதம்பரநாதன் ஆகிய இருவரும் தமிழரசுக்கட்சி சார்பிலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில்

## நான்கு தேசியப் பட்டியல் ஆசனங்கள்; நூற்றுக்கும் மேற்பட்டோர் போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு தேசியப்பட்டியல் ஆசனங்களுக்காக நூற்றுக்கும் மேற்பட்டோர் போட்டியிடுவதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் ஒரே ஒரு தேசியப்பட்டியல் ஆசனமே கிடைத்தது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய மூன்று தேசியப்பட்டியல் ஆசனங்களை முஸ்லீம் காங்கிரஸுக்கு ஒதுக்கவேண்டும்.

இதற்கமைய நான்கு தேசியப்பட்டியல் ஆசனங்கள் முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளன. இந்த நான்கு ஆசனங்களுக்காகவும் நூற்றுக்கும் மேற்பட்டோர் தமக்கே இப்பதவி வழங்கப்படவேண்டும் எனக்கோரி வருகின்றனர்.

இதனால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - தேசியப்பட்டியல் ஆசனங்களுக்கு யார் யாரை நியமிப்பது என்பது குறித்து முடிவுசெய்ய குழுவொன்றை நியமித்துள்ளது.

# க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் வந்தன

(கொழும்பு)

எதிர்வரும் மே ஆறாம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் - பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை 1750 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சுமார் இரண்டு இலட்சத்து 40 ஆயிரத்து 733 பரீட்சார்த்திகள் பாடசாலைகள் மூலமும், ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 958 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

ஏற்கனவே இந்தப் பரீட்சைகளை இந்த மாதம் இரண்டு கட்டங்களாக நடத்தத் திட்டமிட்டிருந்த போதும் பொதுத் தேர்தலை முன்னிட்டு மே மாதத்திற்குப் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க முக்கியஸ்தர்கள் வெளிநாடு செல்ல முயற்சி

(கொழும்பு)

எஸ்.பி.திஸநாயக்க, ரவி கருணாநாயக்க, மகிந்த விஜயசேகர உட்பட 17 முன்னாள் அமைச்சர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான ஊடகவியலாளர்கள் சிலரும் நாட்டைவிட்டு வெளிநாட்டுக்குச் செல்வதற்காக, அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி உயர் மட்டத் தலைவர்கள் - குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமான கடிதத்தைக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் சிறுபான்மையினருக்கு ஆறு இடம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் தேர்தல் ஆணையாளரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேசியப் பட்டியல் மூலம் 11 உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பமுடியும். இதன்படி, இந்தமுறை மூன்று தமிழர்களும் மூன்று முஸ்லிம்களும் தேசியப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு நான்கு ஆசனங்களும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு இரண்டு ஆசனங்களும், மலையகமக்கள் முன்னணிக்கு ஒரு ஆசனமும் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான கே.என்.சொக்ஸி, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், முன்னாள் பிரதி அமைச்சர் நவீன் திஸநாயக்க, முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களான அலி சாகிர் மௌலானா, பி.இராதாகிருஷ்ணன், வி.புத்திரசிகாமணி, எம்.எஸ்.செல்லச்சாமி இவர்களுடன்,

அப்துல் பாய்ஸ் கமால்தீன், இஸ்மாயில் குத்தூஸ், சயின் அகமட் பைலா, டபிள்யூ.பி.எஸ்.புஸ்பகுமார ஆகியவர்களின் பெயர்கள் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் தெரிவித்தார். (01)

**பொதுத் தேர்தல் முடிவுகள் ஒரு பார்வை...**

**கே.ரீ.கணேசலிங்கம்**

# நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலும் சர்வதேச, பிராந்திய, சக்திகளின் நிலையும்



நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கு தனித்துவமான அரசியல் பலத்தை காட்டியுள்ளது. இத்தகைய அரசியல் பலம் நாடாளுமன்றத்தில் அதிக செல்வாக்கையும், தர்மானத்தையும் எடுக்கக்கூடியதாக விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தாலும், ஆளுங்கட்சி பலவீனமாகவுள்ளதினால், தமிழரசுக்கட்சியின் பலம் தனித்துவமானதாகவே அமையும்.

இத்தகைய பலம் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் அதிக தாக்கங்களை உணரவைத்துள்ளதை காணலாம். இந்தக் கட்டுரை சர்வதேச மட்டத்தில் இந்தத் தேர்தல் மூலமாக எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நோக்கவுள்ளது.

'புதிதாக அமையவுள்ள அரசாங்கம் புலிகளுடன் பேசவேண்டும்' இது அமெரிக்கத் தூதுவரது செய்தியாகும். இலங்கையில் இயல்புநிலையை உருவாக்குவதுடன், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அந்தச் செய்தியில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதே கருத்தினை ஐரோப்பிய யூனியனும், ஜப்பானும் வெளிப்படுத்தியிருந்தன.

இத்தகைய கருத்து முதன்மைப்படுத்தப்பட்டதற்கு உடனடிக் காரணம் - தமிழ் மக்களது ஐக்கியமும், ஒருமித்த அரசியல் அபிப்பிராயமும் ஆகும். வடக்கு - கிழக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவைப் பெற்ற, தேர்தலில் நின்ற தமிழரசுக்கட்சி அமோக வெற்றியைப் பெற்றிருந்தது.

இதனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை பேச்சுக்களில் இருந்து பின்தள்ளமுடியாத நிலையும், அதனால் புலிகளுடன் பேசவேண்டும் என்பதையும் ஓர் அழுத்தமாக மேற்குலக நாடுகள் வழங்கியுள்ளன.

மேற்குநாடுகள் விரும்புகின்ற ஜனநாயகமே வடக்கு - கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தது. அதாவது, மேற்கு நாடுகள் விரும்புகின்ற ஜனநாயக மரபுகளுக்கும், பாரம்பரியத்திற்கும் விடுதலைப் புலிகளோ, வடக்கு - கிழக்கு மக்களோ விரோதமானவர்கள் அல்லர் என்பதை இந்தத் தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழர்களின் ஒற்றுமையை சீரழிக்க பல சக்திகள்! திட்டமிட்டு இயங்கின. குறிப்பாக கடந்த தேர்தலில் ஒன்று சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியை குழப்பத்திற்கு உள்ளாக்கி அதன் தலைமைக்குள் உடைவை ஏற்படுத்தியதுடன், தனித்த சுயேட்சைக் குழுவாக போட்டியிடுவதற்கான சூழலை உருவாக்கினர். இதனால், தமிழர் வாக்குகள் சிதறும் எனவும், அதிக அரசியற் பங்களிப்பு சாத்தியப்படாது எனவும் அந்தச் சக்திகள் திட்டமிட்டன.

அவ்வாறான ஒரு நிலையை விடுதலைப் புலிகளின் கிழக்கு அரசியல் இராணுவத் தலைமைக்குள்ளும் தேர்தல் காலத்தோடு குழப்பத்தை ஏற்படுத்தி தமிழர் வாக்குப் பலத்தை சிதைக்க விரும்பினர். வடக்கு - கிழக்கை இராணுவ ரீதியாகப் பிரிப்பதை விட அரசியல் ரீதியாக பிரிப்பதன்மூலம் நீண்டகாலத்திற்குரிய பிரிவினையாக மாற்றலாம் என அந்தச் சக்திகள் கணக்குப் போட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன.

ஆனால், தேர்தலுக்கு முன்பு போடப்பட்ட கணக்குகள் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் ஜனநாயக முறைப்படி முறியடித்துவிட்டனர். தவிர்க்கமுடியாத அரசியல் பலத்தை தமிழர் தமக்குள் ஏற்படுத்திய பிற்பாடு, உலகிலுள்ள எல்லா சக்திகளும் தவிர்க்கமுடியாத நிலையில் தமிழர்களின் தலைமையை ஏற்றுள்ளனர்.

இத்தகைய ஏற்பு தமிழர்களை திருப்திப்படுத்துவதற்காகவோ, அல்லது தமிழர்களின் நலனை பாதுகாப்பதற்காகவோ அல்ல. மாறாக தமிழர்கள் ஏற்படுத்தி மாறுதலை சகிக்க முடியாத நிலையிலும், தமது பாரம்பரியமான, மரபாக உணர்த்தி வந்ததால், அதனை ஆதரிக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவே அத்தகைய சக்திகளுக்கு ஆபத்தாக உள்ளது. அதனை முறியடிக்க அவர்கள் நிறுத்திய அனைத்துப் பிரிவுகளும் தோல்வியையே எதிர்கொள்ள வேண்டிய நிலையை தமிழ்மக்கள் உருவாக்கினர்.

ஆனால், இத்தோடு அந்தச் சக்திகள் தமது முயற்சியை கைவிடப்போவதில்லை. மாறாக அணைத்துக் கொடுக்கும் அரசியல் தந்திரத்தை தொடரப்போகிறார்கள் என்பதே யதார்த்தமாகும்.

இந்தத் தேர்தல் சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்திற்கு ஒப்பான நெருக்கடியை பிராந்திய அரசான இந்தியாவுக்கும் கொடுத்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அப்படியான நெருக்கடியை சமாளித்துக்கொள்வதற்கான வேலைகளை கிழக்கு அரசியலிலும், தென்னிலங்கை அரசியலிலும் இந்தியா தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது. இந்தியாவின் தமிழ் மக்கள் இவ்வாறு தொழிற்படுவார்கள் என பெரியளவில் கருதவில்லை.

மாறாக தேசியக் கூட்டமைப்பின் பலம் நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல வடக்கு - கிழக்கில் குறையுமென்றே கணக்குப் போட்டிருந்தது.

இதனால், விரக்தியடைந்துள்ள இந்தியா-தென்னிலங்கை அரசியலில் நேரடியாகத் தலையிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே பொருளாதார நடவடிக்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு தென்னிலங்கையை பெருமளவில் பாதித்து வருகிறது.

அத்தோடு, அரசியலிலும் இந்தியாவின் தலையீடு அதிகரிக்குமாயின் தென்னிலங்கை இந்தியாவின் பகுதியாகவோ, சந்தையாகவோ, அரசியல் நகர்வுக்கான மையமாகவோ மாறலாம். அவ்வாறு மாறுமாயின் வடக்கு - கிழக்கைவிட அதிக சரண்டலுக்கும், தலையீட்டுக்கும் தென்னிலங்கை அகப்படும். ஆனால், தென்னிலங்கை - வரலாற்றுக் காலம்முதல் இந்திய எதிர்ப்பு வாதத்தையே அதிகம் மறந்துவிடவோ, எதிர்காலத்தில் நிகழாது என்பதற்கோ இடமில்லை.

சிங்கள - பௌத்த ஏதேச்சதிகாரத்திற்கு வழிவகுத்த 'மகாவம்சம்' இந்தியாவை எதிர்ப்பதற்காகவே தமிழன் எதிர்ப்பைத் தனதாக்கிக்கொண்டமை வரலாறு. இன்று அந்த நிலைமாறுவதுடன் இந்திய எதிர்ப்பு வாதத்தை மிக அண்மைக் காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியும் இந்திய நட்புச்சக்தியாக மாறிவிட்டது. இதனால், இந்தியாவுக்கும் - வடக்கு - கிழக்கைவிட தென்னிலங்கை சாதகமாகவும், வாய்ப்பான பகுதியாகவும் மாறுகின்ற சூழல் உருவாகியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தல்மூலம், அதிக மாற்றங்களை ஏற்படுத்த விரும்புகிறது. இந்தியத் தூதுவர் புதிய பிரதமரைச் சந்தித்ததும், அவர் இந்தியாவின் முக்கியத்துவத்தை முதன்மைப் படுத்துவதிலிருந்தும் அதிக வாய்ப்பை, இலாபத்தை இந்தியா அடைய முயற்சிக்கின்றது என்பது தெளிவாகிறது.

இதுவரை, வடக்கு - கிழக்கு அரசியலில் இந்தியாவுக்குச் சாதகமான சக்திகளுடன் இணைந்து வடக்கு - கிழக்கு போக்கை கையாள முயன்ற நிலைமாறி, தென்னிலங்கை சக்திகளுடன் மீண்டும் கூட்டமைத்து இந்தியாவிற்கு எதிரான போக்கைகளையலாம் என கணக்குப்போடுகிறது.

இதன் ஒரு பரிமாணமாகவே பிரதமரது நியமனமும், இந்தியாவின் பேச்சுவார்த்தைக்கான முக்கியத்துவமும் பேசப்படுவதற்கான காரணமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்குக்கும் - இந்தியாவிற்கும் நெருக்கமான உறவு காணப்பட்டாலும், இலங்கை விடயத்தில் இரு தரப்பினரதும் நலன் பொறுத்து முரண்பாடு ஒன்று எழ வாய்ப்புண்டு. இரு சக்திகளுமே விஸ்தரிப்புக்கான இயல்புகளைக் கொண்ட அரசுகள். அதனால், இரண்டினது நலன்களும் வேறுபட்டதாக அமைவதுடன், சில விடயங்களில் ஒற்றுமைத்தன்மை தென்படுவது போல் காணப்படும்.

இதனை மிக நுணுக்கமாக அவதானித்தால் மட்டுமே, விளங்கிக்கொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்க்குதங்களில் இரு சக்திகளுக்கும் பங்கிருப்பது போன்றது. இந்தத் தேர்தலுக்கு பின்பும் இயல்பாக இருந்தபோக்கில், மேற்கிடம் மாறுதல் ஏற்பட வாய்ப்பு தென்படுகிறது. இந்தியாவின் தலையீடு ஒருபக்கம் அதிகரிக்க மறுபக்கத்தில் மேற்கின் செல்வாக்கும் அதிகரிக்கும் நிலை தவிர்க்கமுடியாது. ஆனால், எல்லா சக்திகளும் இலங்கை மக்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அவர்கள் கொண்டிருக்கும் கரிசனையின் நிமித்தம் ஏற்பட்டதொன்றல்ல. மாறாக அவர்களின் அரசியல் இராணுவ நலன்களில் கொண்டுள்ள கரிசனையால் ஏற்பட்ட மாறுதல் என்பதை விளங்கிக்கொள்வது போதுமானது.

---

**உரிமைக்களம்**

**க.ஜங்கரன்**

## விழித்துக் கொள்வோம்

தேர்தல் முடிந்தும் குழப்பம் முடியவில்லை என்பதையே தென்னிலங்கை அரசியலில் அவதானிக்க முடிகின்றது. ஆட்சிக்கான தீர்மானத்தை எந்தக் கட்சியும் தீர்மானிக்கமுடியாத துர்ப்பாக்கிய அரசியல் நிலமை பெரும் நெருக்கடியாக அமைய, தேசிய ஹெல உறுமய புதிய புத்துணர்ச்சியோடு தமது அரசியலை ஆரம்பித்துள்ளது.

அதுவே, ஆட்சியின் நிர்ணய சக்தியாக, தீர்மானமெடுக்கும் சக்தியாக மாறுகின்ற நிலை இலங்கையிலுள்ள சிறுபான்மை இனங்களின் கட்சிகளுக்கு புதிய நெருக்கடியாக மாறியுள்ளது. எனவே, இன்றைய உரிமைக்களம் இரண்டு முக்கிய விடயம் பற்றிக் கருத்துக்களை முன்வைக்கவுள்ளது.

ஒன்று தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள். கிழக்கில் ஏற்பட்டுள்ள குழப்ப சக்திகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்பதாகும். இந்தக் கடத்தல் வெளிப்படையாக நிகழாது விட்டாலும், அடிப்படையில் அவ்வாறே நிகழ்ந்துள்ளது.

இத்தகைய கடத்தலுக்கு இலங்கை இராணுவமும் உடந்தையாக இருக்கின்றது என்ற வகையில் கிழக்கின் குழப்ப சக்திகளின் பக்கபலத்தை தெரிந்துகொள்ள முடியும். ஆனால், உரிமைக்களம் இங்கு முன்வைக்கும் அம்சம் என்னவென்றால் இது ஒரு மனிதஉரிமை மீறல் சம்பவம் அல்லவா?

சர்வதேச அமைப்புக்கள் இலங்கையில் உள்ள உள்நாட்டு மனிதவுரிமைப் பிரிவுகள், அது சார்ந்த தனிப்பட்ட மனிதவுரிமை ஆர்வலர்கள் எல்லோரும் ஏன் இந்த விடயத்தை கண்டிக்கவில்லை. ஒரு சாதாரண மனிதனுக்குரிய உரிமைகளுக்கு அப்பால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேர் கட்சியின் தலைமை உறுப்பினர்களது அனுமதியையும் மீறி கடத்திச் சென்ற சம்பவத்திற்கு யாரும் கண்டனமோ, அபிப்பிராயமோ இதுவரை வெளியிடவில்லை.

அவ்வாறு, இனி வெளிப்படுத்தினாலும் அது உள்நோக்கங்களுடன் நிகழ்ந்த சம்பவமாகவே அமையும். அப்படியாயின், மனித உரிமை தொடர்பாக சர்வதேச, உள்ளூர் அமைப்புக்களுக்கும், ஆர்வலர்களுக்கும் பின்னால் ஏதோ ஒரு அரசியல் உள்நோக்கம் உண்டு என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இது மிக மோசமான உரிமை மீறல் சம்பவம் இதனை நியாயப்படுத்தவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாது. ஒவ்வொரு அமைப்புக்களோடும் அரசியல் இலாபம் நலன் கலந்துள்ளது என்பதை இதன்மூலமாக புரிந்துகொண்டால் போதுமானது.

இரண்டாவது யாழ். மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவில் போட்டியிட்ட தலைமை வேட்பாளர் ஆனந்தசங்கரிக்கு ஹெல உறுமய தேசியப் பட்டியிலில் இடம்கொடுக்கப் போவதாக வெளிவந்த செய்தியாகும்.

ஹெல உறுமய மிக அண்மையில் முளைத்த ஓர் அமைப்பு அல்லது அரசியல் கட்சி. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையாலேயே இந்தளவு ஆசனங்களையும் இந்தக் கட்சி பெற்றது.

அப்படியிருந்தும், பௌத்த இராட்சியத்தை அமைக்கப்போவதாகக் கூறுவதுடன் விடுதலைப் புலிகளை தமிழரின் பிரதிநிதிகள் அல்ல என்றும், அவர்களுடன் மட்டும் பேசமுடியாது என்றும் அதிகாரப் பரவலாக்கம் பற்றி எந்தவித தெளிவான விளக்கத்தையும் இனப்பிரச்சினை தொடர்பாக கொண்டிராத கட்சியொன்று - ஆனந்தசங்கரி என்ற ஒரு தமிழனை தேசியப் பட்டியலில் அனுப்ப முயற்சிப்பது என்பது அதன் அரசியல் உள்நோக்கத்தை கோடிட்டுக் காட்டுகிறது.

ஒரு தமிழன் என்பதற்காக பிரதமர் பதவியை இழந்ததாக சில ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. ஆனால், அவர்கள் எல்லோரும் தமிழர்கள் அல்ல. தமிழை ஒரு மொழியாகப் பேசுகின்ற 'சர்வதேச இனம்' இதற்கு எந்த அடையாளம் தேசிய மட்டத்தில் இல்லாத கூட்டம்.

ஹெல உறுமய தேசியப் பட்டியலில் வாய்ப்பைக் கொடுக்கின்றதோ, இல்லையோ வேறுவிடயம். ஆனால், ஆனந்தசங்கரியாரின் பெயரை சிபார்சு செய்திருக்கின்றது என்றளவுக்கு அவர் சிங்கள - பௌத்த அரசியல் சக்திகளுக்கு எப்படி முக்கியமானவராக விளங்குகிறார் என்பது தெளிவாகிறது. அவர் அன்று மட்டுமல்ல இன்றும் சிங்களத்தின் தூதுவராகவே விளங்குகிறார்.

தேர்தலுக்காக யாழ்ப்பாணம் வந்த ஆனந்தசங்கரி எங்கேயாவது வாய்ப்புக் கிடைத்தால் நாடாளுமன்றம் செல்வார். அதற்காகவே, சுயேட்சையை அமைத்தவர். தமிழருக்கு அவர் செய்ததைவிட சிங்களவர்களுக்கு அதிகம் செய்திருக்கிறார். இனியும் செய்யத் தயாராகிக் கொண்டிருக்கிறார். அவரை வைத்து தமிழரை ஏப்பம் இடலாம் என சிங்களத் தலைமைகள் திட்டமிடுகின்றன.

எனவே, தமிழ் மக்களே நீங்கள் ஹெல உறுமய தேசியப் பட்டியல் எம்.பிக்கு அல்லவா உங்கள் வாக்குகளை விரயமாக்கிவிட்டீர்கள். வேதனைதான். அடுத்தமுறையாவது விழித்துக் கொள்ளுங்கள்!

# அமெரிக்கா போர்நிறுத்தமொன்றை பலூஜா நகரில் அறிவிக்கவேண்டும்!

## ஈராக்கின் ஆளும் சபை கோரிக்கை



ஈராக்கின் சனி முஸ்லிம் போராளிகளுக்கெதிராக பலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் போராடி வருகின்றனர். இங்கு போர் நிறுத்தமொன்றை நடைமுறைப் படுத்தவேண்டும் என ஈராக்கிய ஆளும் சபை வேண்டியுள்ளது. பாக்தாத்தின் தென்பகுதியில் தொடரும் வன்முறைச் சம்பவங்களுக்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும்எனவும் அது தெரிவித்துள்ளது.

இந்தவாரம் பலூஜாவில் நடந்த சண்டையில் 450 பேர்வரை உயிரிழந்துள்ளதாகவும் 1000 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் வைத்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

தற்காலிக போர் நிறுத்தமொன்றை முஸ்லிம் குழுவினர் செயற்படுத்த முன்வரவில்லை. இதனால் இருதரப்பினர்களிடையேயான போர் நிறுத்தமொன்றிற்கு வருமாறு அமெரிக்க அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

பத்திரிகையூடாக இந்தச் செய்தியை போராட்டத்தில் ஈடுபடும் முஸ்லிம் குழுவினருக்கு தெரிவித்துள்ளதாக இராணுவ ஜெனரல் மார்க் கிமிட் பாக்தாத்தில் தெரிவித்தார்.

## அமெரிக்கர் இருவருக்கு சிறைத்தண்டனை விதிப்பு!

(வோஷிங்ரன்)

அமெரிக்கர்கள் இருவர் முஸ்லிம் புனிதப் போர் ஒன்றிற்கான பயிற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டு, நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

ரண்டால் ரொட் ரோயர், இப்ரகீம் அல் கமிட் ஆகிய இருவருமே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின் பாகிஸ்தானிய முஸ்லிம் குழுவொன்றுடன் ஆட்களை இணைத்துக்கொள்வதற்கு துணைபுரிந்ததாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரோயர் தெரிவித்தார்.

இதேவேளை - அல்பிரட் எனப்படும் அமெரிக்கருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர் 2000 ஆம் ஆண்டில் லஷ்கார் - இ - தொய்பா எனப்படும் பாகிஸ்தான் முஸலிம் குழுவொன்றுடன் தொடர்புகளை வைத்திருந்தார்.

இவர்களுக்கான தீர்ப்புக்களை வழங்கும் போது, பயங்கரவாத குழுக்களுக்கு துணையாக இருப்பவர்களுக்கு இந்தத் தண்டனை ஒரு பாடமாக அமையமுடியுமென நீதியரசர் தெரிவித்தார்.

## ரஷ்ய சுரங்க விபத்தில் ஏழு தொழிலாளர் பலி!

(மொஸ்கோ)

ரஷ்யாவில் கரிச் சுரங்கம் ஒன்றின் வாயுக் கழிவினால் ஏற்பட்ட விபத்தில் 7 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதுடன், ஒரு டசினுக்கும் மேற்பட்டவர்கள் சுரங்கத்தில் சிக்கியுள்ளதாகவும் சுரங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தன்சானியா மாநிலத்தில் அமைந்துள்ள சுரங்கமொன்றில் மெதேன் வாயுக் கசிவினாலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

13 சுரங்கத் தொழிலாளர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், 33 தொழிலாளர்களைத் தேடும் பணிகள் தொடர்வதாகவும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.

600 தொழிலாளர்கள் பணிபுரியும் சுரங்கத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அத்துடன் காப்பாற்றப்பட்டவர்களில் மூவர், விபத்தின்போது ஏற்பட்ட சிறிய காயங்களுக்காக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# அல்ஜீரியாவில் ஜனாதிபதி தேர்தல் ஒழுங்கான முறையில் நடைபெற்றது!

## ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர் தெரிவிப்பு

ஐரோப்பிய பாதுகாப்புச் சபையின் தேர்தல் கண்காணிப்பாளரான புறுஷ் ஜோர்ச், அல்ஜீரியாவில் தேர்தல் ஒழுங்கான முறையில் நடைபெற்றுள்ளது எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அப்டெலகிஷ் தேர்தலில் சரியான முறையில் வெற்றிபெற்றுள்ளார் என சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

83 வீத வாக்குகள் மூலம் அப் டெலகிஷ் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தார்.

இதேவேளை, இந்தத் தேர்தலை தான் ஏற்கவல்லையென 8 வீத வாக்குகளைப் பெற்றிருந்த முன்னாள் பிரதமர் பென்பிளிஷ் தெரிவித்தார்.

பல கட்சிகளைக் கொண்ட தேர்தல் அமைப்பொன்று 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு தேர்தல் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றதாக மேற்கு நாட்டு இராஜதந்திரிகளும் தெரிவித்துள்ளனர்.

120 இற்கு மேற்பட்ட சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இந்தத் தேர்தலில் பங்குகொண்டிருந்தனர்.

அல்ஜீரிய மக்கள் பலர், இந்தத் தேர்தலில் ஜனாதிபதி பவுரெல் பிலிக்கர்விற்கு வாக்களித்தமைக்கு காரணம் அவர் நாட்டில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு உதவிசெய்திருந்தமையே என பி.பி.சி செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.



## வேட்புமனுத்தாக்கலின் போது ஆந்திராவில் கலவரம்!

நடிகை ரோஜா வேட்புமனுத்தாக்கல் செய்த போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து மத்திய தேர்தல் அவதானிப்பாளர்கள் நேரில் விசாரணை நடத்தினர்.

ஆந்திர மாநிலம் - நகரியில் நடிகை ரோஜா வேட்பு முனுத்தாக்கல் செய்தபோது கல்லெறிச் சம்பவம் இடம்பெற்றதை அடுத்து, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

இதுபற்றி விசாரணை நடத்த மத்திய தேர்தல் கண்காணிப்பாளர் குழு நகரிக்கு வந்தது. வேட்புமனுத்தாக்கல் செய்த இறுதிநாளான புதன்கிழமை நகரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்த வீடியோ நாடாக்களை அவர்கள் பார்வையிட்டனர்.

# வெளிநாட்டு குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை; அயர்லாந்து அரசு கருத்துக்கணிப்புக்கு திட்டம்!

வெளிநாட்டுப் பெற்றோர்களுக்கு அயர்லாந்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிரஜா உரிமை வழங்குவது தொடர்பான கருத்துக் கணிப்பொன்றினை அந்த நாட்டு அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் அயர்லாந்து மாத்திரமே அந்த நாட்டில் பிறந்த வெளிநாட்டவர்களின் குழந்தைகளுக்குப் பிரஜாவுரிமையை எதுவித சிக்கல்களுமின்றி வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் பெண்கள் தமது மகப்பேற்றிற்காக அயர்லாந்திலுள்ள வைத்தியசாலைகளை நாடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையான செயற்பாடுகள் அயர்லாந்தின் குடிவரவுச் சட்டங்களை அவமதிப்பதாக நிதி அமைச்சர் 'மைக்கல்' மக்டோவல்' தெரிவித்தார்.

புதிய அரசியல் சட்டங்களை உருவாக்குவதற்கு முன்னர் மக்கள் கருத்துக் கணிப்பொன்று தேவைப்படுகிறது. புதிய சட்டத்தின்மூலம் குழந்தையின் பெற்றோர்களில் ஒருவர் குழந்தை பிறந்த காலத்திற்கு முன்னர் மூன்று ஆண்டுகள் வரை அயர்லாந்தில் அல்லது பிரித்தானியாவில் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

ஐரிஷ் குடியுரிமை வழங்கப்பட்ட குழந்தைகளை இந்தச் சட்டம் பாதிக்காதெனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அயர்லாந்தின் எதிர்க்கட்சிகள் தம்முடன் புதிய சட்டங்கள் தொடர்பாக அரசு கருத்துக்கள் எதையும் பரிமாறிக் கொள்ளவில்லை எனவும் இந்தப் புதிய சட்டம் குழந்தைகளின் உரிமைகளைப் பாதிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் அயர்லாந்தின் உயர்



நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தில் அந்த நாட்டில் பிறந்த குழந்தைகளுக்கும், அவர்களின் உடன்பிறப்புக்களுக்கும் உடன் பிரஜா உரிமை வழங்கப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.




## ஜார்க்கண்ட் மாநிலத்தில் சின்ஹாவின் கார் மீது கல்வீச்சு



நடைபெறவுள்ள தேர்தலில் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரான ஜஸ்வந்த் சின்ஹா - ஜார்க்கண்ட் மாநிலம் ஹசாரிபாத் தொகுதியில் பாரதீய ஜனதா வேட்பாளராக போட்டியிடுகிறார்.

இவரை எதிர்த்து எதிர்க்கட்சியின் சார்பில் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் புவனேஸ்வர் பிரசாத் மற்றும் பாரதீய ஜனதாவில் இருந்து விலகிய மகாவீர்லால் விஷ்வகர்மா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஹசாரிபாத் தொகுதியில் ஜஸ்வந்த் சின்ஹா தீவிர பிரசாரம் செய்துவருகிறார். குஜ்ஜு" நகரில் நடந்த தேர்தல் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் சென்றுகொண்டிருந்தபோது ரோத்வே பஜாத் பகுதியில் அவர் சென்ற கார் மீது வலது கம்யூனிஸ்ட் தொண்டர்கள் கல்வீசித் தாக்குதல் நடத்தினர். இருப்பினும் அவரது கார் நிற்காமல் சென்றுவிட்டது. பொதுக்கூட்டத்தில் பேசி முடித்துவிட்டு ஜஸ்வந்த் சின்ஹா திரும்பிவந்தபோது அதே கும்பல் அங்கு நின்று கொண்டிருந்தது. அவர்கள் ஜஸ்வந்த் சின்ஹாவின் காரை வழிமறித்து நிறுத்த முயன்றனர்.

ஆனால், சாரதி சாமர்த்தியமாகச் செயற்பட்டு காரைச் செலுத்தினார். இதனால், ஆத்திரமடைந்த கம்யூனிஸ்ட் தொண்டர்கள் மீண்டும் கல்வீசித் தாக்குதல் நடத்தினா. இதில் கார் சேதமடைந்தது. ஜஸ்வந்த் சின்ஹா காயமின்றித் தப்பினார். இது குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தவறுதலான கண்ணீர்ப்புகை தாக்குதலில் பல்கேரியாவில் நாற்பது பேர் படுகாயம்!



பல்கேரியாவின் தலைநகர் சோபியாவில் கண்ணீர்ப் புகைக்குண்டொன்றை தவறுதலாக ஒருவர் பிரயோகித்தார். இந்தக் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகத்தினால் 40 பேர் வரை படுகாயமடைந்தனர்.

சோபியாவில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்தைக் கவனிக்கும் பரிவிற்கு விஜயம் மேற்கொண்ட ஒருவர் தவறுதலாக கண்ணீர்ப் புகைக் குண்டைப் பிரயோகித்ததாக உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட நால்வர் இந்த வாயுவை அதிகம் சுவாசித்ததில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய 51 வயதுடைய இறைச்சிக் கடைக்காரர் ஒருவர் கைது செய் யப்பட்டார்.

கட்டடத்தினுள்ளே இருந்தவர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் தீயணைக்கும் படையினரும், பாதுகாப்பு அதிகாரிகளும பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்குச் சென்றுள்ளனர்.

சுய பாதுகாப்பிற்காகச் சிறிய வகையான கண்ணீர்ப் புகைக் குண்டுக் கருவிகளை - பல்கேரியக் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என உள்துறை அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமைச்சரவைப் பதவியேற்பில் ஜே.வி.பி கலந்துகொள்ளவில்லை

## ஆட்சியமைக்க முன்னரே உறவில் விரிசல்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவைப் பதவியேற்பு வைபவம் நேற்று மாலை நடைபெற்ற போதும் அந்த நிகழ்வில் ஜே.வி.பி கலந்துகொள்ளவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள ஜே.வி.பியினர், தமக்கு நான்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களையும் நான்கு பிரதி யமைச்சுப் பதவிகளையும் வழங்க வேண்டுமெனக் கோரியிருந்தனர்.

எனினும், அமைச்சுக்களை ஒதுக்குவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நேற்றைய பதவியேற்பு நிகழ்வில் ஜே.வி.பியினர் எவரும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

நேற்று மாலை இடம்பெற்ற அமைச்சரவைப் பதவியேற்பு வைபவத்தை நேரடியாக ஒளிபரப்புச் செய்வதற்கு அரசாங்கத் தொலைக் காட்சிக்கு அனுமதிக்கப்படவில்லை.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பதவியேற்பு நிகழ்வு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பி.ப. 4.30 மணிக்கே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சர்களுக்கான பதவிப் பிரமாணத்தை ஜனாதிபதி சந்திரிகா செய்துவைத்தார்.

பிரதான அமைச்சுப் பொறுப்புக்களான பாதுகாப்பு மற்றும் பௌத்த சாசன அமைச்சு ஆகியவற்றை ஜனாதிபதி சந்திரிகா தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் பூரண கட்டுப்பாட்டில்...

தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இவர்களை வைத்திருந்தால் தமது பாதுகாப்பை மேலும் உறுதியாக்குவதுடன், இவ்வாறான சரணடையும் சம்பவங்கள் மற்றும் தமக்கெதிராகப் போரிடும் சம்பவங்களைத் தவிர்க்கலாம் என கருணா கருதியிருக்கலாம் எனவும்,

அத்தோடு, தலைமைப்பீடத்தின் தாக்குதலை எதிர்கொள்வதற்கான திராணியற்ற நிலையைச் சமாளிப்பதற்காகவும் இது இடம்பெற்றிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இதேவேளை, கருணா அணியினர் தமது பின்வாங்கலின் போது இராணுவ ட்றக் வண்டியைப் பயன்படுத்துவதாகவும் இதனைச் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்ட புகைப்படத்தில் காண முடிகின்றதும் குறிப்பிடத்தக்கது

வாகரையில் இருந்து வெளியேறிய பொதுமகன் ஒருவர் சண்டை பற்றி ஒரு பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்தபோது,

கட்டுடல் கொண்ட - வளர்ந்த- புலிகளின் பேராளிகள் அலை அலையாக வெருகல் பக்கத்திலிருந்து திரண்டு வந்துகொண்டிருந்தனர்.

கருணா பக்கத்தில் உள்ளவர்கள் அவர்களுக்குத் தாக்குப் பிடிப்பார்கள் என்று நான் நம்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

கருணா போர்நிறுத்த காலத்தில் இணைந்த, புதிதாகப் பயிற்சிபெற்ற, சண்டைக்கள அனுபவமற்ற பல போராளிகளையே தன்வசம் வைத்திருக்கிறார் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

தனது அணியினர் மத்தியில் இருக்கும் போராளிகளின் தலைமைப்பீடத்தின் விசுவாசம் குறித்த அச்சத்தைக் கொண்டுள்ள கருணா யாரை நம்புவது, யாரை நம்பாமல் விடுவது என்ற இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும்,

இதேவேளை தொப்பிக்கல மீது தாக்குதல் இடம்பெற்றால் கருணாவின் அணியின் முன்னணிப் போராளிகளே தலைமைப்பீடத்திற்கு உதவுவார்கள் என்பதையுமே களநிலமை குறித்து ஊகிக்கக் கூடியதாகவுள்ளது என மேற்படி சர்வதேச செய்தி நிறுவன செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை - வாழைச்சேனை வடக்குப் பிரதேசத்தில் மீண்டும் நேற்று மாலை விடுதலைப் புலிகளுக்கும் கருணா அணிக்கும் இடையில் மோதல் ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை நகரில் இருந்து 16 கிலோ மீற்றர் தொலைவில் இந்த மோதல் இடம்பெறுவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரடோட்டயர் தெரிவித்தார்.

சேத விபரங்கள் குறித்து தங்களுக்கு எதுவித தகவல்களும் கிடைககவில்லையென்றும் அவர் கூறினார்.

இதனிடையே வாகரைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தால் எட்டுக் கிராமத்தைச் சேர்ந்த மூவாயிரத்து 91 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 187 பேர் தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறி அயற் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் மீட்பு அணியினரால் மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசம் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்பு அணிப்படையான ஜெயந்தன் படையணி நேற்றுமாலை வாகரைப் பிரதேசத்திற்குள் சென்றபோது கருணா குழுவினரிடமிருந்து எதுவித எதிர்ப்பும் காட்டப்படவில்லை. இவ்வாறு வாகரையைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த புலிகளின் மீட்பு அணியினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இங்கு நடந்த சம்பவங்களால் இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்ற மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

# குஞ்சுப் பரந்தன் பகுதியிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கிளிநொச்சி குஞ்சுப் பரந்தன் பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் ஒன்று தமிழீழ காவற்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கல்வயலைச் சேர்ந்த கனகரத்தினம் சரவணபவன் (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

கடந்த ஏழாம் திகதி வீட்டில் தங்கியிருந்த இவரை வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத குழுவினர் காணிப்பிரச்சினை தொடர்பாக பேசுவதற்காக கிளிநொச்சிக்கு வருமாறு அழைத்துச் சென்றனர்.

இவர் மீண்டும் திரும்பி வராததையடுத்து உறவினர்கள் தேடிய போது குஞ்சுப் பரந்தனிலுள்ள கிணறொன்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரை வீட்டுக்குவந்து அழைத்துச்சென்றவர் உட்பட மூவரை தமிழீழ காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். (202)

# 31 புதிய அமைச்சர்கள் நேற்று...

வெளிவிவகார அமைச்சர் - லக்ஷ்மன் கதிர்காமர்

வர்த்தக வாணிப நுகர்வோர் விவகார அமைச்சர் - ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

ஆற்றுவள அபிவிருத்தி, ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சர் - மைத்திரிபால சிறிசேன

நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனிவிரத்ன

மகளிர் அபிவிருத்தி மற்றும் சமூக நல அமைச்சர் - சுமேத ஜெயசேன

நிதி அமைச்சர்- சரத் அமுனுகம

கிறிஸ்தவ மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் - மில்றோய் பெர்ணான்டோ

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் - ஜீவன் குமாரதுங்க

சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் - பவித்திரா வன்னியாராச்சி

பெருந்தோட்டத்துறை அமைச்சர்- அனுர பிரியதர்சன யாப்பா

சுதேச மருத்துவ அமைச்சர் - திஸ்ஸ கரலியத்த

நகர அபிவிருத்தி மற்றும் நீர் விநியோக அமைச்சர் - தினேஸ் குணவர்த்தன

விவசாய, சந்தை அபிவிருத்தி, இந்து விவகாரம், தமிழ் மொழி பாடசாலை மற்றும் தொழிற் பயிற்சி வடக்கு அமைச்சர் - டக்ளஸ் தேவானந்தா

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் - பேரியல் அஷ்ரப்

சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் - சுசில் பிரேமஜெயந்த

தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர்- அதாவுட செனிவிரத்ன

பிராந்திய உட்கட்டமைப்பு அமைச்சர் - ஆர்.எம்.எஸ்.பி. நாவின்ன

திறமை அபிவிருத்தி தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் - பியசேன கமகே

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சர் - ஜனக பண்டார தென்னக்கோன்

போக்குவரத்து அமைச்சர் - பீலிக்ஸ் பெரேரா

தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் - சி.பி.ரட்னாயக்க

கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் - ஏ.எல்.எம்.அதாவுல்லா

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் - ஜெஜி னோல்ட் கூரே

விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் திஸ்ஸ விதாரன

மேற்படி 31 பேருமே நேற்றைய தினம் ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டவர்களாவர்.

# கருணா குழுவிலுள்ள...

எதிரான செயற்பாடுகளிலும், மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றார். இதற்கு உந்துதலாக தமிழ்த்தேசியத்திற்கு விரோதமான சக்திகளும் பின்புலத்தில் செயற்படுகின்றன.

கருணாவினால் இயக்க நடைமுறைக்கு எதிராகத் தோற்றுவிக்கப்பட்ட குழப்பத்தை எமது தலைமைப்பீடம் இரத்தக்களரி, உயிரிழப்புக்கள் இன்றி சுமுகமான நிலைக்கு கொண்டுவருவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளது.

ஆயினும், போராளிகள் தமது சுயவிருப்பத்தின்பேரில் வெளியேறி இயக்கத்துடனோ அன்றி பெற்றோருடனோ இணைந்து கொள்வதற்குத் தடையாக இருப்பது மட்டுமல்ல போராளிகளை அழிப்பதற்கான செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளார்.

இந்தநிலையில் பொதுமக்களையும், போராளிகளையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்கு தலைமைப் பீடம் தள்ளப்பட்டுள்ளது. எனவே கருணாவை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்திலும் அனேக போராளிகள் எம்மிடம் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே வீணான உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கு எஞ்சியுள்ள போராளிகளையும் இணைந்துகொள்ளுமாறு கோருகிறோம்.

இதேவேளை - தமிழ்த்தேசியத்திற்கான போராட்டத்தில் தமது பிள்ளைகளை மனமுவந்து இணைத்து வைத்த பெற்றோர்கள் கருணாவின் துரோகச் செயல்களுக்குத் தமது பிள்ளைகளைப் பலியாக்கிவிடாது அவர்களை மீட்டெடுத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறோம் எனத் கூறப்பட்டுள்ளது.

## அவதானமாக...

கிடைத்துள்ளன.

நாம் அவ்வாறான எச் செயலிலும் ஈடுபடவில்லை. ஏற்கனவே வாணிபருடன் கதைத்து ஒழுங்கு செய்யப்பட்ட நடைமுறைகளுக்கமைவாக எமது பணிமனைகளில் மட்டும் நிதியைப் பெற்றுக்கொள்கின்றோம்.

எனவே வீடுகளுக்கோ கடைகளுக்கோ வந்து எமது பெயரால் நிதி கேட்பவர்களுக்கு எவ்வித நிதியினையும் வழங்கவேண்டாமெனப் பணிவுடன் வேண்டுகின்றோம் இவ்வாறு விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கதிரவெளி....

தமிழர் புனர்வாழ்வுக்கிளையினர் நேற்று வழங்கியிருந்தனர்.

இவ்வாறு வந்தவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY
MR.M.A HARI
புதிய பிரிவு ஆரம்பம்
14.04.2004 புதன் மாலை 3.30 p.m.
WEDNESDAY MONDAY } 3.30 p.m- 4.30 p.m
HARY'S INSTITUTE
இல.564 கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்
(சி/2451)

# மரண அறிவித்தல்



வேலுப்பிள்ளை - இராஜரெட்ணம்
(செல்வம்)

B.A தம்பிலேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## வேலுப்பிள்ளை இராஜரெட்ணம் (செல்வம்)

(R.B. ஆசனப்பதிவகம் வேளாங்கன்னி களஞ்சியம், அனித்தா ரான்ஸ்போட், பிரபல வர்த்தகர்)

8.04.2004 அன்று காலமாகிவிட்டார். அன்னார் வேலுப்பிள்ளை கமலாம்பிகை தம்பதியின் அன்பு மகனும், நடேசு பாக்கியத்தின் பாசமிகு மருமகனும், யோகராணியின் பாசமிகு கணவரும்,பிரபாகரன் (லண்டன்) டொறின், றொசிற்றா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஆறுமுகம், சரஸ்வதி, சூரன் (இந்தியா), தர்மலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பற்குணம், தங்கராசா, தங்கராணி, யோகராசா, ஆனந்தராசா, ஜீவராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற இராமையாவின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 12.04.2004 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் பூதவுடல் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன்மணல் மயானத்தில் தகனக் கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி - யோகராணி
மகன் - பிரபாகரன் (லண்டன்)
டொறின், றொசிற்றா

(711)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.